MAKKAL PATHTHIRIKKAI 30,MARCH,2019

இதழ் – 04
இருவார வெளியீடு
நமக்காக நாம்

# மக்கள் பத்திரிக்கை

சிந்தனைக் கிளர்ச்சி செய்வோம் !



உலகளாவிய பொருளாதாரத்தால் வேற்றுமை உலகளாவியது ஆகின்றது, சமூக அநீதி உலகளாவியது ஆகின்றது, வறுமை உலகளாவியது ஆகின்றது. இந்த உலகளாவிய பொருளாதாரத்தோடு தான் நாம் பொருட்களை விற்றும் வாங்கியும் வாழ வேண்டும். எனவே இவற்றுக்கு எதிரான போராட்டமும் உலகளாவியது ஆகின்றது

— பிடல் காஸ்ரோ —

திருவள்ளுவர் ஆண்டு ௨050 (விளம்பி வருடம்) - பங்குனி மாதம், ௰6ம் நாள்
சனிக் கிழமை, 30 - மார்ச் - 2019
விலை ௨0.00 ரூ.

புல்மோட்டை கனிய மணல் வளத்தை பன்னாட்டு கம்பனிகளுக்கு தாரைவார்த்து கொடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது அரசு பக். 07

சுவர்ணவாகினியில் ஏற்பட்ட பதற்றம் தொடர்பாக ஏனைய தொலைக்காட்சிகள் இருட்டடிப்பு செய்துவிட்டன பக். 11

இரணைமடு குளத்திலிருந்து குடாநாட்டிற்கு நீர் வழங்குதல் என்பது மூன்று பத்தாண்டுகளுக்கு மட்டுமான ஒரு இடைக்கால திட்டமாகும் பக். 09

# விடுதலைப் போராட்டத்தின் உண்மையான சர்வதேச நட்புச் சக்திகள் யார்?



“ஒரு உண்மையான பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தை நாம் வளர்த்தெடுப்போம். சர்வதேச பாட்டாளி வர்க்க படைகளுடன் மனித இனத்தை மீட்டெடுப்பதற்கான புனித நோக்குடன் கூடிய கொடியின் கீழ் போரடுவோம்”

**- சேகுவேரா**



“தங்களது அரசால் ஒடுக்கப்படும் தேசங்கள், அரசியல் வழியில் பிரிந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கோர வேண்டும். இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது வெற்று வார்த்தையாக தான் இருக்கும்”

**- லெனின்**

ஆறாம் பக்கம் பார்க்க

# 1700 ஆண்கள் பாலியல் வன்புணர்வு குற்றமிழைத்துள்ளனர்



கடந்த வருடம் இலங்கையில் 1706 பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் நடந்துள்ளதாக சிறிலங்கா பொலிசின் உத்தியோகபூர்வ முறைப்பாட்டு பதிவறிக்கைகள் தெரிவிக்கின்றன. அதாவது நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் சமூகத்தில் ஒவ்வொரு 5 மணித்தியாலத்துக்கும் ஒரு ஆண் பாலியல் வன்புணர்வு குற்றச் செயலில் ஈடுபடுகின்றார். இது பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டவற்றின் விபரம் மாத்திரமே. இக்குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களில் 1367 பேர் பதினாறு வயதுக்கும் குறைவான சிறுமிகள். முறைப்பாடுகளில் இதுவரையில் வெறும் 10 குற்றச் செயல்களுக்கு மாத்திரமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 797 பாலியல் தொந்தரவு குற்றங்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது.

இரண்டாம் பக்கம் பார்க்க

# வில்பத்து விவகாரமாக்கப்படுவது ஏன்?

வில்பத்து தேசிய வனப் பகுதியில் காடழித்து மக்கள் குடியேற்றப்பட்டுள்ளதாக செய்மதி படங்களை ஆதாரமாகக் கொண்டு செய்தி பரவ விடப்பட்டுள்ளது. இசுலாமிய அமைச்சர் ஒருவரே இவ்வாறு காடழித்து, இசுலாமியக் குடியேற்றம் செய்வதாக இனவாத நோக்கில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்து. அரசியல்வாதிகளும், சமூக செயல்பாட்டாளர்களும் இனவாத பிரச்சாரம் மூலம் சிலர் அரசியல் ஆதாயம் தேட முயல்வதாகவும், ஒரு சிலர் காடழிப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கருத்துக் கூறி வருகின்றார்கள்.

இரண்டாம் பக்கம் பார்க்க



நல்ல கருத்துக்களின் [illegible]

## கட்டுரைகள்










www.facebook.com/paththirikkai
paththirikkai@gmail.com

அடுத்த இதழ் வெளியீடு
ஏப்ரல் – 13 (பங்குனி மாதம் 30ம் நாள்)
மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பக்க தொடர்ச்சி...

## கடந்தாண்டில் 1700 ஆண்கள் பாலியல் வன்புணர்வு குற்றமிழைத்துள்ளனர்

இதேபோல் கடந்த 2015, 2016,2017 ஆண்டுகளில் முறையே 2030, 1503, 1726 என பாலியல் வன்புணர்வு குற்றங்கள் பதிவாகியுள்ளன. அநேகமாகக் குற்றவாளி களின் எண்ணிக்கை பதிவான குற்றங்களுக்குச் சமனாக இருக்கின்றன.

பாலியல் வன்புணர்வு சம்பவங்களின் போது குற்றவாளிகளான ஆண்களை விடுத்துப் பாதிக்கப்பட்ட பெண்களையே குற்றவாளிகளாகக் காணும் எமது சமூகம் காரணமாக ஏராளமான குற்றச் செயல்கள் தொடர்பாக முறைபாடுகள் செய்யப்படுவதில்லை. இலங்கையில் பாலியல் வன்புணர்வு குற்றம் ஒன்றின் வழக்கு விசாரணைகள் முடியச் சராசரியாக 6 -12 வருட காலம் எடுக்கின்றன. குற்ற வாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படுவது மிக மெதுவான செயல்முறையா கவே உள்ளது. கடந்த 2015, 2016, 2017 முறையே 211,199,148 என்றளவிலே பாலியல் குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு; பாதிக்கப்பட்டவர்களுக்குச் சார்பான விரைவான சட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாதிருப்பதோடு, சமூகத்திலும் பாலியல் வன்புணர்வு குற்றம் இழைக்கும் ஆண்களை விடுத்து, பாதிக்கப்பட்ட பெண்களை எதிர்மறையாக நோக்கும் பிற்போக்கான மனநிலையே காணப்படுகிறது. அத்துடன் எமது சமூகத்தில் பெண்கள் தொடர்பாக ஆண்களின் ஆதிக்க மனோபாவமும், வக்கிர மனநிலையும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுக்கு அடித்தளமாக இருக்கின்றன.

பாலியல் வனபுணர்வுகள் பெண்கள் மீதான வன்முறையின் ஒரு தீவிர நிலை மாத்திரமே. இதை விட சமூகத்தில் எல்லா தளங்களிலும் பெண்கள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்ட வருகின்றார்கள். இவ்வாறான தொந்தரவுகள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்படுவதில்லை எனக் கூறுமளவுக்கு மிக மிக குறைவான முறைபாடுகளே செய்யப்படுகின்றன.

ஐநா சபையின் ஆய்வுவொன்று இலங்கையில் பொது போக்குவரத்தின் போது 90 சதவீதமான பெண்கள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப் படுகின்றது. இதன் உண்மையான பக்கம் என்னவெனில், இலங்கை சமூகத்தில் பெரும்பாலான ஆண்கள், பெண்களை பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கு பவர்களாக அல்லது அத்தகைய மனோபாவத்தை கொண்டிருக்கின்றனர் என்பதே ஆகும்.

சமூக, பொருளாதார விடயங்களில் பெண்கள் பங்கெடுக்க வரும் சந்தர்ப்பங்க ளில் அவர்களை பாலியல் இச்சைகளுக்கும், சுரண்டலுக்கும் உள்ளாக்க நினை க்கும் மனநிலையானது; பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிராகக் குற்றவாளிக ளான ஆண்களைத் தண்டிப்பதிலும் பின்னிற்கும் நிலையை உருவாக்கி; பாதிக்கப்படும் பெண்களையே இந்த விடயத்துக்கு பொறுப்பாக்கும் பண் பாட்டை உருவாக்கி விட்டிருக்கின்றது. இந்த சமூக காரணியே பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கு அடித்தளமாகி, பாதுகாப்பின்மையை உருவாக்கி விட்டிருக்கின்றது. ஒருவகையில் இந்த நிலைமைக்கு, இதை எதிர்க்காத அனைவரும் பங்காளர்களே. ●

## திட்டமிட்டு உருவாக்கப்படும் மின்சார தட்டுப்பாடு

அதிக வெப்பமான காலநிலையாலும், மழைவீழ்ச்சி இன்மையாலும் ஏற்பட்ட நீர்த்தட்டுபாட்டின் காரணமாகவே மின்சார வெட்டு அமுல் படுத்தப்படுவதாக அரசாங்கம் கூறியுள்ளது. போதியளவு நீர் இல்லை என்றால் நீர்மின் உற்பத்தி குறையும் என்பது தெரிந்த விடயம். காலநிலை மாற்றம் குறித்து அறிந்திருந்தும் அரசாங்கம் எந்த வித முன்னேற்பாட்டையும் எடுத்திருக்கவில்லை. இந்த விடயங்களைக் கவனிக்கத் தான், விசேட வரப்பிரசாதங்களையும், சலுகைகளையும் கொடுத்து மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்கின்றோம். எனினும், எந்த வித செயல்திட்டங்களையும் வகுக்காது, தட்டுப்பாடு வந்த பின்னர் மக்களைச் மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்குமாறு கூறுகின்றார்கள். அமைச்சர் ரவி கருணா நாயக்கா மின்வெட்டுக்காக மக்களிடம் மன்னிப்பும் கேட்கின்றார்.

அமைச்சரவை, மக்கள் வீடுகளின் இரண்டு மின்குமிழ்கள் வீதம் அணைத்து வைக்க வேண்டும் எனவும், நித்திரை கொள்ளும் முன் மின்குமிழ்களை அணைக்க வேண்டும் எனவும் விசித்திரமான தீர்மானத்தை நிறைவேற்றியது. மின்சார கட்டண அதிகரிப்பு காரணமாக மக்கள் மின்சாரத்தைப் சிக்கனமாகத் தான் பயன்படுத்துகி ன்றார்கள். ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோக பூர்வ இல்லங்க ளில் அலங்கார விளக்குகள் அணைக்கப்பட்டதைக் கூட காணமுடியவில்லை.

அரசாங்கம் நீர்த்தட்டுப்பாட்டை காரணம் காட்டினாலும், நுரைச்சோலையில் மின்னுற்பத்தி தொகுதி ஒன்று செயலிழந்து போனமையும், தனியார் மின்னுற்பத்தி கம்பனிகள் அரசுக்கு மின்சாரத்தை விலைக்கு விற்பனை செய்ய முயல்வதுமே மின்வெட்டுக்கான உண்மையான காரணம் என கூறப்படுகின்றது.

இதை உறுதிப்படுத்தும் வகையில், தற்போது கொழும்பு துறைமுகத்தில் மின் உற்பத்தி செய்யும் வெளிநாட்டு கப்பல் ஒன்று தரித்து நிற்கும் செய்திகள் வெளியாகின. அதே வேளை மின்சார சபை மூன்று கம்பனிகளுடன் மின்சாரம் கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் ஒரு கம்பனி அரசாங்க அமைச்சர் ஒருவருக்கு சொந்தமானதாகும். இன்னுமொரு கம்பனி யாழ் சுன்னாகத்தில் நிலத்தடி நீரை மாசு படுத்திய நோர்த்தன் பவர் கம்னியாகும். இந்த கம்பனிகளின் நிதி அறிக்கைகளில் 2016 ஆம் ஆண்டு முதல் இலாபத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. 2016 இல் இருந்து மின்சார சபைக்கு மின்சாரத்தை விற்பனை செய்ய முடியாமல் போனமையே இதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு தனியார் மின் உற்பத்தியாளர்கள் அரசியல்வாதிகள் ஊடாக மின்சார துறையில் மாபியாக்கள் போல் செயல்படுவதாலேயே தேவையான அளவில் மின் உற்பத்தி செய்யப்படாது, மின்சார தட்டுப்பாடு திட்டமிட்டு உருவாக்கப்படுவதை சில அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டியும் உள்ளனர். ●

முன்பக்க தொடர்ச்சி...

## வில்பத்து விவகாரமாக்கப்படுவது ஏன்?

1938 ஆம் ஆண்டு தேசிய வனமாக பிரகடனப்படுத்தப்பட்ட வில்பத்து வனம் புத்தளம், அநுராதபுரம் மாவட்ட பகுதியிலேயே அமைந்துள்ளது. யுத்தகாலத் தில் இராணுவ வாகன அணிகள் இந்த வனத்தினூடாக பயணிக்கும் போது கொரில்லா தாக்குதலுக்கு உள்ளாகாமல் இருக்கப் பாதையின் இருமருங்கி ளும் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டன. மேலும், சுற்றுலா விடுதிகள் அமை ப்பதற்காகவும் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. ஆனால், செய்தி பரப்பப்படுவது போல் குடியேற்றங்களுக்காக காடழிக்கப்படவில்லை.

தற்போது வெளியிடப்பட்டுள்ள செய்மதி படங்கள் மன்னார் மாவட்டத்தின் மாவில்லு பகுதிக்குரியதாகும். 2017 ஆம் ஆண்டு சனாதிபதியால் இந்த பகுதி பாதுகாக்கப்பட்ட வன பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால், ஆயுத மோதல் நிலவிய காலப்பகுதியில் இப்பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்திருந்தார்கள்.

யுத்தம் முடிந்த பின் இம்மக்கள் மீளக்குடியேற வந்த போது பிரச்சினைகள் எழுந்ததால், அவர்கள் மாவில்லு பகுதியில் இராணுவத்தினால் பாதையின் இருபக்கத்திலும் காடழிக்கப்பட்டிருந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டார்கள். இதன் போது இராணுவம் அழித்த பகுதிகளுக்கு மேலதிகமாகவும் காடுகள் அழிக்கப்பட்டு வாழ்விடங்கள் அமைக்கப்பட்டன.

எனினும், இந்த பகுதியில் அத்துமீறிய வகையில் காடழிக்கப்பட்டுள்ளதும் நடந்துள்ளது. ஆனால், இந்த காடழிப்பு மகிந்த இராசபக்ச ஆட்சிக்காலத்தின் போது வரையப்பட்ட தேசிய பௌதீக அபிவிருத்தி கொள்கையில் கூறப்பட்ட குடியேற்றத் திட்டங்களுக்கு அமையவே இடம்பெற்றிருக்கின்றது.

இச்சம்பவம் நடந்து பல வருடங்கள் கடந்து விட்ட பின் தற்போது உண்மைக்குப் புறம்பாக வில்பத்துவில் காடழிக்கப்பட்டு இசுலாமியக் குடியேற்றம் நடைபெறு வதாகப் பிரச்சாரம் செய்யப்படுவதானது, காடழிப்பு, அரசியல் இலாபம் கருதிய இனவாத பிரச்சாரங்களுக்கு மேலதிகமாக மக்களைத் திசைதிருப்பும் சதியாக இருக்கும் சாத்தியமே உள்ளது.

ஏனெனில், மக்களின் கவனம் இந்த பிரச்சாரங்களில் குவிந்திருக்கும் சந்தர்ப்ப த்தில் அரசாங்கம் சிங்கராஜ காட்டிலும், மகாவலி எல் வலய பிரதேசத்திலும், நாட்டின் பல பகுதியிலும் உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் சுற்றுலா துறை அபிவிருத்தியை இலக்கு வைத்து பாரிய காடழிப்பும் ஏற்பட்டுள்ளது.

## மக்கள் கருத்து

# ஹரிஷ்ணவி

## படுகொலைக்கு நீதி கிடைக்குமா?



### பொதுமக்கள் திரண்டெழுந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்

- திருமலை சக்தி -

ஹரிஸ்னவியை படுகொலை செய்தவ ர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என மக்கள் பத்திரிக்கை தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வருவது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

பெண்கள் மீது வன்முறை குற்றம் புரிந்தவர்கள் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தப்பித்து சுதந்திரமாக உலாவி வருவது தொடர்ந்து வருகின் றது. அரச இயந்திரம் சட்டத்தை அமுல் படுத்தி குற்றவாளிகளை உடனுக்குடன் தண்டித்து மக்களின் பாதுகாப்பை உறு திப்படுத்துவதில் வேண்டா வெறுப்பா கவே செயல்பட்டு வருகின்றது. சிறுமி வித்தியா படுகொலை வழக்கில் பொது மக்களின் அழுத்தம் காரணமாகக் குற்ற வாளிகளுக்குத் தண்டனை வழங்கப்ப ட்டாலும், இன்னும் தண்டனை நிறை வேற்றப்படவில்லை.

ஹரிஸ்னவி போன்று இன்னும் ஏராள மான பெண்களுக்கு நடந்த கொடுமை க்கு இதுவரை நீதி மறுக்கப்பட்டு தான் வருகின்றது. மக்கள் விழிப்புடன் இரு ந்து அழுத்தம் கொடுத்தால் மாத்திரமே குற்றவாளிகளை விரைந்து தண்டிக்க முடியும்.

எனவே,மக்கள்ஹரிஸ்னவி விடயத்தில் மாத்திரமல்ல பெண்களுக்கு எதிரான சகல வன்முறைகளுக்கு எதிராகவும் விழிப்புடன் இருந்து எதிர்ப்புக் குரல் கொடுக்க வேண்டும். அதன் மூலம் மாத்திரமே பெண்களுக்கான சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்ற வாளிகளைத் தண்டிக்கவும் முடியும்.

மக்கள் பத்திரிக்கை அதற்கான தள த்தை உருவாக்கி வருவது பாராட்டுக்கு ரியது. எனினும் மக்கள் பத்திரிக்கை ஹரிஸ்னவி விடயத்தில் மட்டுமல்லாது அநீதி மறுக்கப்பட்ட அனைத்து கொடு மைகளையும் வெளிப்படுத்தி அழுத்தம் கொடுக்கவேண்டும்.எதிர்வரும்காலங்க ளில் அதைச் செய்யும் என எதிர்பார்க்கி ன்றேன். மக்களும் அநீதிகளுக்கு எதி ராகக் குரலைப் பதிவு செய்து அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பத்திரிக்கை

மக்கள் பத்திரிக்கை, இல 09, திரேசா ஒழுங்கை,
வேளாங்கன்னி வீதி, பாலையூற்று, திருகோணமலை
தொலைப்பேசி +94769098390
மின்னஞ்சல் - paththirikkai@gmail.com
இணையத்தளம் - www.paththirikkai.com
முகநூல் பக்கம் - www.facebook.com/paththirikkai
இதழ் - 04 | பக்கங்கள் -12 | பங்குனி மாதம், 16ம் நாள்


## மக்கள் அதிகாரத்தை நிலைநாட்டுவோம்!

சனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களாட்சி என்று சொல்லப்படுகின்றது. இலங்கையில் வாழும் இரண்டு கோடி மக்களும் நேரடியாக ஆட்சியில் பங்கெடுக்க முடியாது என்பதால், பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, அவர்களிடம் ஆட்சி நடத்தும் பொறுப்பை வழங்கும் ஏற்பாடுள்ளது. இதற்காகவே சனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் என வெவ்வேறு மட்டத்திலான பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றோம்.

ஆனால், மக்கள் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் ஊடாக மக்களின் அதிகாரம் பிரயோகிக்கப்படுகின்றதா? மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றதா? என வினவினால் இல்லை என்பது தான் பதிலாகக் கிடைக்கும்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, வாக்களிக்கும் நாள் வரையிலும் தான் மக்கள் அதிகாரம் உடையவர்களாக இருக்கின்றார்கள். அதன் பின் பிரதிநிதிகள், மக்கள் மீது அதிகாரம் செலுத்துபவர்களாக மாறி விடுகின்றார்கள்.

தேர்தல் காலங்களிலும் மக்கள் சிந்தனையை ஊடகங்கள், விளம்பரங்கள், பிரச்சாரங்கள் மூலம் அவர்களுக்குச் சாதகமாகத் திசைதிருப்பி விடுகின்றார்கள். அதற்கேற்றாற் போல் ஊடகங்களும் மக்களுக்குரியதாகவோ, மக்கள் அதிகாரம் செலுத்தக் கூடியதாகவோ இருப்பதில்லை.

அப்படியென்றால் நாம் எம் சார்பில் அதிகாரத்தைப் பிரயோகிக்கத் நாம் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் ஏன் எமக்காக வேலை செய்வதில்லை? யாருக்காக, யாரின் பிரதிநிதியாக வேலை செய்கின்றார்கள்?

அண்மையில் நடந்த பெருந்தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள போராட்டத்தை எடுத்துக் கொள்வோம். கோரிக்கை தொழிலாளர்களுடையது. தொழிலாளர்களின் கோரிக்கைக்குப் பலதரப்பும் ஆதரவு கொடுத்திருந்தார்கள். கோரிக்கையை ஆதரிக்காதது இரண்டே இரண்டு தரப்பு தான். முதலாவது பெருந்தோட்ட கம்பனிகளின் உரிமையாளர்கள். இரண்டாவது, தொழிலாளர்களைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள்.

அதாவது, எமது தேவைகள், கோரிக்கைகளைப் பிரதிநிதித்துவம் செய்வதை வேலையாக ஏற்றுக் கொண்டு சலுகையும், சம்பளமும் வாங்கும் நாம் தெரிவு செய்த பிரதிநிதிகள், அவர்களுக்கு வாக்களிக்காத கம்பனி உரிமையாளர்கள் பக்கம் நின்று கொண்டு கட்டளையிடுகின்றார்கள்.

எனில், இங்கு நடந்திருப்பது மக்களின் அதிகாரம் இடைத்தரகர்கள் மூலம் மக்களுக்கு எதிரான சக்திகளினால் நயவஞ்சகமாக சூறையாடப்பட்டிருப்பதைத் தவிர வேறு எதுவுமல்ல.


நாம், எமது பிரதிநிதிகளாக அவர்களின் இடைத் தரகர்களைத் தான் இதுவரைக்காலமும் தெரிவு செய்ருக்கின்றோம். எனவே, எமது உண்மையான பிரதிநிதிகளைத் தெரிவு செய்து எமது அதிகாரத்தை நிலை நாட்ட வேண்டுமெனில், நாமே நேரடியாக அமைப்பு நடவடிக்கைகளில் பங்கெடுத்து, நாம் இயக்கக்கூடிய எமக்கான பிரதி நிதியை, எம்மத்தியிலிருந்து தெரிவு செய்யும் அதிகார மையத்தையும் புதிய அரசியல் பண்பாட்டையும் கட்டியெழுப்ப வேண்டியது கட்டாயமானதாகும்.

கடந்த வருடம் நவம்பர் மாதமே விவாதித்து முடித்திருக்க வேண்டிய வரவு - செலவு திட்டம், அரசியல் அதிகார போட்டிகள் காரணமாகத் தற்சமயம் தான் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுகின்றது. வரவு - செலவு திட்டம் என்பது அரசாங்கம் ஒரு வருடக் காலத்தில் வருவாய் ஈட்டிக் கொள்ளும் மார்க்கங்களையும், செலவுகளையும் முன்கூட்டியே திட்டமிட்டு முன்வைக்கும் எழுத்து வடிவிலான ஆவணமாகும். சாதாரணமாக வரவு - செலவு திட்டம் முன்வைக்கப்படும் போது கடந்த வருடத் திட்டம் தொடர்பாகப் பகுப்பாய்வு முன்வைக்கப்படும். இந்த பகுப்பாய்வு மூலமே கடந்த வருடத் திட்டத்தில் முன்மொழிந்தவற்றில் செய்தவை, செய்ய முடியாது போனவை குறித்து அறிந்து கொள்ள முடியும். ஆனால், தற்போதைய நிதியமைச்சர் இம்முறை அவ்வாறான எந்த பகுப்பாய்வையும் முன்வைக்கவில்லை.

வெரித்தே எனும் அமைப்பு நடத்திய ஆய்வின் பிரகாரம், கடந்த வருட முன்மொழிவுகளில் வெறும் 30 சதவீதமானவையே செயல்படுத்தப்பட்டுள்ளது. 70 சதவீதமான முன்மொழிவுகள் நடைமுறைபடுத்தப்படவில்லை. நடைமுறைபடுத்தப்படாத விடயங்களிலும், 30 சதவீதமான விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் எந்தவொரு தகவல்களையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை. மேலும், 30 வீதமான விடயங்கள் எந்த விதத்திலும் ஆரம்பிக்கபடவில்லை. மிகுதி 10 சதவீதமான விடயங்கள் மர்மமான நிலையில் உள்ளது.

இந்த நிலையிலேயே அரசாங்கம் வரவு - செலவு திட்டத்தில் பல புதிய திட்டங்களை அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் முழுவதும் மக்களுக்கு நலன்புரி சேவைகளையும், நிவாரணங்களையும் வழங்குவது தொடர்பான முன்மொழிவுகளால் நிரம்பியிருக்கின்றதே ஒழிய, அவற்றை நடைமுறைப்படுத்தும் சாத்தியப்பாடுகள் எதனையும் குறிப்பிடவில்லை.

எனவே, கடந்த முறை போலவே, இம்முறையும் பெரும்பாலான திட்டங்கள் நடைமுறைக்கு வராமல் மறக்கப்படும் என்பது உறுதியானது. அதே போல் நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நிலையில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் திட்டங்களைத் தயாரிக்காது, மக்களுக்கு நிவாரணங்களை வாரி வழங்கும் திட்டங்களே அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்தில் தேர்தல்கள் தொடர்ந்து வரவிருப்பதால், மக்களின் எதிர்ப்புகளைச் சமாளிக்கும் வகையிலான வாக்குறுதிகளாகவே இத்திட்டம் அமைந்துள்ளது. வரவு - செலவு திட்டத்தின் பிரபலமான ஓரிரு முன்மொழிவுகளை ஆராய்ந்தாலே இதை விளங்கிக் கொள்ள முடியும்.



## மக்களுக்கு கனவுகளை மட்டுமே தந்திருக்கும் வரவு–செலவு திட்டம்

புதிதாகத் திருமணம் செய்பவர்களுக்கு வீடொன்றை அமைத்துக் கொள்வதற்குக் கடன் வழங்கும் முன்மொழிவு, மக்கள் மத்தியில் அதிகமாகக் கதைக்கப்படும் விடயமாகும். எனினும், இந்த கடன் வழங்கப்படும் விதம், வழங்கும் வங்கி போன்ற எந்தவொரு விடயமும் சொல்லப்படவில்லை.

வீடொன்றை அமைப்பதற்குச் சதுர அடி ஒன்றுக்கு 6000 ரூபாய் செலவாகும். ஆயிரம் சதுர அடி பரப்பளவுள்ள வீட்டை நிர்மாணிக்க அறுபது இலட்ச ரூபாய் தேவை. இந்தளவு கடனை வங்கியில் பெற வேண்டுமாயின் குறைந்தது மாதாந்தம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் சம்பளம் பெறுபவராக இருக்க வேண்டும்.

எனவேதான், இந்த திட்டம் வெறும் முன்மொழிவாக மாத்திரமே இருக்கப் போகின்றது. வரவு - செலவு திட்டங்களில் வழங்கப்படும் நிவாரணங்களின் பலன் வெறும் இருபது சதவீதமானவர்களுக்கே கிடைக்கின்றது என ஆய்வொன்று கூறுகின்றது. எனில், இந்த திட்டமும் நடைமுறைபடுத்தப்பட்டாலும், உதவி தேவைப்படுவர்களை விட ஏதேனும் செல்வாக்கைப் பிரயோகிக்கக் இயலுமான இருபது சதவீதமானவர்களுக்கே கிடைக்கும். மேலும், இந்த திட்டத்தின் மூலம் பொருளாதாரத்துக்கு ஏதேனும் நன்மை பயக்குமா என வினவினால் இல்லை என்பதே பதிலாகும்.

அதே போல், சமூர்த்தி உதவித் தொகை மேலும் ஆறு இலட்சம் பேருக்கு வழங்கப்படும் எனச் சொல்லப்பட்டுள்ளது. தற்போதும் 15 இலட்சம் பேர் சமூர்த்தி உதவி பெறுகின்றார்கள். இதில் நான்கரை இலட்சம் பேருக்கு மாத்திரமே மாதம் 3000 ரூபாய் உதவி தொகை கிடைக்கிறது. ஏனையோருக்கு மாதம் 300 ரூபாய் வரையில் தான் வழங்கப்படுகின்றது. இந்த தொகை எந்த வகையிலும் தனிநபர்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தப் பங்களிப்பு செய்யப் போவதில்லை.

அதே, போல் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு முன்மொழியப்பட்டுள்ளது. இந்த சம்பள அதிகரிப்புக்கான நிதி பண்டங்கள், சேவைகளுக்கு விதிக்கப்படும் வரியை அதிகரிப்பதின் மூலமே திரட்டப்படுகின்றது. வரியை அதிகரித்தால் சந்தையில் அனைத்து சேவைகள், பண்டங்களின் வரியும் அதிகரிக்கும். இலங்கையில் உழைக்கும் பிரிவில் 15 வீதமானவர்களே அரசாங்க சேவையில் இருப்பவர்கள். எனில், ஒட்டுமொத்தமாகப் பொருட்கள், சேவைகளின் விலை உயருமானால் தனியார் துறையில் தொழில் செய்யும் 85 சதவீதமானவர்கள் நேரடியாகவே பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறே, இத்திட்டங்கள் எதுவும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்யும் வகையில், உதவி தேவைப்படுவோர்கள் மீது கரிசனைக் கொண்டு முன்மொழியப்படவில்லை. மாறாகக் கவர்ச்சிகரமான திட்டங்களை முன்மொழிந்து மக்களைக் கனவுலகில் தள்ளும் சதியாகவே இருக்கின்றது.

இது மக்களை ஏமாற்றும் நோக்கிலானதே. அரசாங்கம் இதுபோல் யதார்த்த தன்மை அற்ற வரவு செலவு திட்டங்களைத் தயாரிக்காமல், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையிலே வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, இங்கு உதாரணமாகக் காட்டிய விடயங்களை நோக்குவோம்; கடன், பொருளாதார உதவி திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பை மாகாண சபைகளுக்கே வழங்க வேண்டும். இதுவே உலகளாவிய நடைமுறையாகும். காரணம், ஒவ்வொரு பிரதேச மக்களினதும் தேவைகள் வேறுபடும். மேலும், பிரதேச மட்ட நிறுவனங்கள் மூலமே உதவி தேவைப்படுவர்களை நேரடியாக இனம் கண்டு உதவி திட்டங்களைக் கொண்டு சேர்க்க முடியும். இந்த முறையின் மூலமே ஒதுக்க கூடிய நிதியை, அதிகமானோருக்குப் பலன் எதையும் தராத வகையில் சிறிய அளவில் பகிர்வதைத் தவிர்த்து, தேவையானவர்களுக்குப் பலன் தரும் வகையில், தேவையான அளவில் கிடைக்கச் செய்ய முடியும்.

அதே போல் அனைத்து தரப்பினதும் சம்பளத்தை அதிகரிக்காது, ஒரு பிரிவிடமிருந்து வரி வசூலித்து இன்னுமொருபிரிவுக்குச்சம்பளஅதிகரிப்பைவழங்குவது சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை அதிகரித்து, நெருக்கடிகளை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

இதற்கு மாறாக, அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களின் அன்றாட வாழ்க்கை செலவீனங்களையும், அடிப்படை வாழ்க்கை தேவைகளுக்கான செலவையும் குறைக்கும் வகையிலான திட்டங்களை அமுல்படுத்திச் செயல்படுத்த வேண்டும். உதாரணமாக இன்று தொலைப்பேசி அழைப்பு ஒன்றுக்கு செலவிடும் 100 ரூபாயில் 32 ரூபாய் அரசாங்க வரியாகும். இவ்வாறு அனைத்துப் பண்டங்கள், சேவைகளில் வரி அறவிடப்படும் போது, ஒட்டு மொத்தமாக வாழ்க்கை செலவு அதிகமாகும். எனவே, ஒவ்வொவொரு தொழில் வழங்குநரும் ஊழியர்களைத் தக்க வைக்க அதிக ஊதியத்தை வழங்க நேரிடும். தொழில் வழங்குனர்கள் இந்த தொகையை தமது பண்டங்கள், சேவைகளின் விலையை அதிகரிப்பது மூலமே ஈடு செய்வார்கள். இது பொருளாதார நெருக்கடியை அதிகரிக்குமே தவிரச் சீராக்காது.

ஆகவே, அரசாங்கம் நத்தார் தாத்தா பரிசு வழங்குவது போல், யதார்த்த நிலைகளைப் புறக்கணித்து, தேர்தல் நோக்கில் வரவு - செலவுகளை திட்டமிடாது, நீண்டகால அடிப்படையில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை ஆய்வுகளின் அடிப்படையில் தயாரிக்க வேண்டும். அல்லது மக்கள் அப்படியான கொள்கையுடைய பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மலையகப் பகுதிகள் தமிழர்கள் பரந்து வாழுகின்ற பிரதேசங்களாக இருந்த போதும், இலங்கையின் வடபாகத்தை தங்களின் பெரும்பான்மை பிரதேசமாகவும் பூர்வீக உடைமையாகவும் கொண்டு தமிழர்கள் தமது தேசிய இருப்பை கட்டிக்காத்து வருகின்றார்கள்.

வடக்கைப் பொறுத்தவரைச் சிங்களம், முஸ்லிம், தமிழர்கள், என மூன்று தேசிய இனங்கள் காணப்பட்டாலும் இங்குப் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களே! ஆனால் அண்மைக்காலமாக தமிழர்களின் தேசிய இருப்பையும், பெரும்பான்மையையும் கேள்விக்குறியாக்கும் நிகழ்வுகள் ஆங்காங்கே பரவலாக அரங்கேறி வருகின்றன. அதில் ஒன்று பிரச்சினைகளை உருவாக்குதலும் , தமிழர்களுக்கிடையே உள்ள கருத்தியல் முரண்பாட்டைப் பூதாகரமான பிரச்சனையாக உருவாக்குவதும் ஆகும். இது பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரல் என்பதை ஒவ்வொரு தமிழரும் விளங்கிக் கொள்வது காலத்தின் தேவை.

ஒரு சில அரச ஊடுருவு சக்திகளால் கிறிஸ்தவர்களுக்கும் இந்துகளுக்கும் பிரச்சினையை உருவாக்க நினைத்த நிகழ்ச்சி நிரல் தோல்வி கண்டுள்ளது. மன்னாரில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள மனித எலும்புக் கூடுகள் சங்கிலிய மன்னன் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்களைக் கொன்றதாகத் திசை திருப்ப ஆரம்பித்த வேளையில் அது பெரிதும் எடுபடாத பிரச்சாரம் ஆகி விட்டது.

மன்னார் மாவட்டத்தில் இந்துக்கள் கிறிஸ்தவர்களுக்கான பிரச்சினை ஆண்டாண்டு காலமாக ஆங்காங்கே சில கருத்தியல் முரண்பாடாகவும் சில கசப்பான சம்பவங்களுமாக நடைபெற்று தான் வந்தன. தமிழீழ விடுதலைப்புலிகளின்ஆட்சிக்காலத்தில்இப்பிரச்சனையானது தணிக்கப்பட்டிருந்தது. அதே போல் தமிழர்களுக்கு இடையான சாதிப் பாகுபாடும் ஓரளவுக்குத் தணிக்கப்பட்டிருந்தது. ஆனால், அது வேரோடு அழியவில்லை. அது இப்போது முளைக்க ஆரம்பிக்கும் நிலையில் நீர் ஊற்றி வளர்க்கவே ஆளும் தரப்புகளால் சில

> “மன்னார் திருகேதீச்சர ஆலய அலங்கார வளைவு உடைக்கப்பட்டது கசப்பான சம்பவம் தான் இதில் இரண்டு தரப்பிலும் பிழைகள் இருக்கத் தான் செய்கின்றது”

வும் நடைபெற்ற செயலுக்குப் பிராயச்சித்தம் செய்யவும் சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என்று வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இயேசுவின் வாழ்விலும் போதனையாலும் நாம் பெற்றுக்கொண்ட அன்பு, மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, தியாகம், புரிந்துணர்வு, சகோதரத்துவம், குடும்ப வாழ்வு ஆகியன கத்தோலிக்க மதத்தின் அடையாளங்கள். இதை நாம் இழந்து விடாமல் பாதுகாப்போம். இப்படியான நிகழ்வுகள் எமது கத்தோலிக்க மதத்தின் பரிசுத்தத்துக்கு ஏற்படும் களங்கங்களாக நாம் மனம் வருந்தி பிராயச்சித்தம் செய்ய வேண்டும்

தவிர்க்க முடியாத காரணங்களால் மதங்களிடையே அவ்வப்போது ஏதாவது கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் ஆரோக்கியமான பேச்சுவார்த்தைகள் மூலமாக அவற்றைத் தீர்த்து வைக்க முயற்சி செய்ய வேண்டுமே ஒழிய வன்முறைகளிலும் அடாவடித்தனங்களிலும் ஈடுபடக் கூடாது.
இவ்வாறாகஅமைகிறதுஅந்தஅறிக்கை

# திருக்கேதீச்சர ஆலய அசம்பாவிதமும் தமிழர் அரசியல் பலமிழப்பும்

அதேவேளை இந்து மக்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிலைப்பாட்டை மன்னார் கிறிஸ்தவ மக்கள் முன்வைக்கின்றனர். 2002ம் ஆண்டு திருக்கேதீச்சரம் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டி

இந்த நகர்வில் ஒரு கட்டம்தான் திருதேதீச்சர அலங்கார வளைவு உடைப்பின் பின்னரான சில அசம்பாவிதங்கள். இதை நாம் சிறிய வட்டத்திற்குள் நின்று சிந்திக்காமல் சற்று ஆழமாகவும் அகலமாகவும் கருத்தில் கொண்டு சிந்தித்துக் கையாளவேண்டும்.

இலங்கைத் தீவின் வடக்கில் தமிழர்கள் இரண்டு மதங்களால் ஆன்மீக ரீதியாக வழிநடத்தப்படுகின்றனர். ஆனால் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தமிழர்கள் இரண்டு மதங்களை வழிபடுகின்ற போதும், அவர்கள் ஓர் உறவுக்காரர்களே. தந்தை இந்துவாக இருப்பார். மகன் கிறிஸ்தவனாக இருப்பார். இங்கு நேர்த்திக் கடனுக்காகத் தனது மகனைக் கிறிஸ்தவனாகத் திருமுழுக்கு அளித்த இந்து அப்பாவையும் காணும் அதே வேளை, தனது அண்ணாவின் மகளுக்குத் திருமணம் செய்வதற்காக இந்து மதத்திற்கு மாறிய கிறிஸ்தவ தாயையும் காணலாம். இங்குக் காலையில் கத்தோலிக்க கோயிலில் நிற்பதும் மாலையில் இந்துக் கோயிலில் நிற்பதும் ஓர் வழமையான நிகழ்வு. இந்நிகழ்வுகள் தமிழர்களிடையே ஓர் இணைப்பையும் ஒருமைப்பாட்டையும் நிலை நாட்டுகின்ற சமிக்ஞைகள். ஆனால், மன்னார் மாவட்டம் இந்த நான்கு மாவட்டங்களில் இருந்து சற்று வித்தியாசமானது.

இவ் திருகேதீச்சர வளைவு சம்பந்தமான பிரச்சனை ஓர் பாரியப் பிரச்சனை அல்ல. இது தமிழர்களின் அரசியற் பிரச்சினைகளோடு ஒப்பிடும்போது ஒரு சிறு தூசுக்கு ஒப்பானது. ஆனால், இது இப்போது சில ஊடுருவு சக்திகளால் ஊதிப் பெருப்பித்தது மட்டுமல்லாமல் பூதாகரமாகப் பட்டு வருகின்றது. இது எமது அரசியல் ரீதியான இருப்புக்குக் கேள்விக்குறியாக்கும் வகையில் சில அரசியல் சக்திகளால் நகர்த்தப் பட்டு வருகிறது.

தமிழர்களுக்கு இடையே சில பிரிவினைகளை உண்டுபண்ணிப் பிரித்தாள நினைப்பது இவர்களின் நிகழ்ச்சி நிரல். தமிழர் மத்தியில் அண்மையில் இடம் பெற்ற ஒரு சில சம்பவங்கள் கதைத்துத் தீர்வுகாணப்படவேண்டியவை.மாறாகத் தமிழர்களின் கருத்தியல் ரீதியான விடயங்கள் இன்று பாரிய பிளவுகளாக வளர்க்கப்பட்டு அரசியல் நகர்வாக நடத்தப்படுவது இதற்கு ஒரு சான்று. இதில் சாதிய ரீதியில் அரசியல் கட்சி தொடங்கப்பட்ட விடயமாக இருந்தாலும் சரி, தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கருத்தியல் ரீதியாக முரண்பட்டு சுய நலத்திற்காகப் பிரிந்து தமிழர்களின் பலத்தைப் பிரிக்க நினைக்கும் சக்திகளானாலும் சரி, அனைவரும் ஒரு தரப்பே ஆவர்.



சக்திகள் உருவாக்கி விடப்பட்டுள்ளன.

மன்னார் திருக்கேதீச்சர அலங்கார வளைவு உடைக்கப்பட்டது என்பது ஓர் கசப்பான சம்பவம். இச்சம்பவத்தில் இரண்டு தரப்பிலும் பிழைகள் இருக்கத்தான் செய்கின்றன. மன்னார் லூர்து மாதா ஆலய நிர்வாக மக்கள், சில விட்டுக்கொடுப்புடன் நடந்திருக்கலாம். ஆனால், அவர்கள் அன்று அதைச் சிந்திக்காமல் இன்று சிந்திக்கின்றார்கள்.

திருகேதீச்சர நிர்வாகமானது குறித்த கிறிஸ்தவ ஆலய நிர்வாகத்துடன் இருந்த முரண்பாட்டை, அனைத்து இந்துகள் நோக்கியும் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளார்கள்.

இப்பிரச்சினையின் பின் மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லத்தால் ஓர் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அதேவேளை யாழ் மறைமாவட்ட ஆயர் இல்லாததாலும் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. கருத்தியல் ரீதியில் இவ் இரண்டிற்கும் பாரிய வித்தியாசங்கள் உள்ளன. மன்னார் ஆயர் இல்லத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையானது தங்களை நியாயப்படுத்துவதாக அமைந்ததால், இந்து மக்களிடையே ஒரு விதமான சஞ்சலத்தையும், சமூக வலைத்தளங்களில் பல விவாதங்களையும் ஏற்படுத்தியிருந்தது.

கனீசியஸ்

**யாழ்மறைமாவட்ட அறிக்கை**

எமது இந்துமத சகோதரர்களின் மிகவும் பழமை வாய்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலமாக விளங்குகின்ற திருகேதீச்சர ஆலய வீதியில் அமைக்கப்பட்ட வளைவு பற்றி ஊடகங்களில் வெளியான செய்திகள் நமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. கத்தோலிக்கர் என்ற வகையில் நாம் வெட்கித் தலை குனிந்து எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்.

தமது சிவராத்திரி விழாவை அனுஷ்டிக்கும் தருணத்தில் நடந்த இத்தகைய தகாத நிகழ்வினால் மனம் உடைந்து காணப்படும் இந்துமத சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம். எல்லா மதங்களையும் மதத்தவர்களையும் அன்பு செய்ய வேண்டும், மதிக்க வேண்டும் என்று தான் கத்தோலிக்க திருச்சபை எமக்குப் போதிக்கிறது. இந்நிலையில் இச்செயலை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. தமிழர்களாகிய நாம் மத வேறுபாடுகளின்றி சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாக இருக்கும் இந்நிலையில், இப்படியான வேண்டத்தகாத நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாது இருக்க

ருந்தது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களால் இலங்கை அரசுடனும் இராணுவ பாதுகாப்பு தலைமைகளுடனும் ஜனநாயக ரீதியில் போராடிய பின்னர் திருக்கேதீச்சர ஆலயம் இந்துகளின் திருவிழாவுக்காக திறந்தவிடப்பட, இந்த கிறிஸ்தவ மக்கள் வழி சமைத்துக் கொடுத்தார்கள் என்பதனையும், திருகேதீச்சர அலங்கார வளைவு உடைப்பின் பின் உடைக்கப்பட்ட திருச்சொரூபம் இந்துக்களால் உடைக்கப்படவில்லை தங்களைப் பிரிக்க நினைக்கும் சக்திகளால் உடைக்கப்பட்டது என்பதை விளங்கிக் கொள்வது போல், சில பிரச்சனைகளைத் தமிழர்களுக்காகத், தமிழர்களின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுப்புடன் தீர்க்க இபபோராட்டங்களை நடாத்தும் இந்து மக்களின் தலைமைகள் முன்வர வேண்டும்.

திருக்கேதீச்சர ஆலய நிர்வாகத்தில் மன்னார் மாவட்ட இந்துக்கள் உள்ளடக்கப்பட்டு இருந்தால், மன்னார் கிறிஸ்தவ மக்களுடன் இணக்கப்பாட்டுடன் செல்வார்கள் என லூர்து மாதா ஆலய நிர்வாக கிறிஸ்தவ மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், மன்னார் திருக்கேதீச்சர ஆலய நிர்வாகத்தில் வெளிமாவட்ட இந்து மக்கள் செயற்படுவதன் காரணமாக அக்கிராம கிறிஸ்தவ மக்களுடன்இணக்கப்பாட்டில் தொடர்ந்து செல்வது ஓர் பிரச்சினையாக உள்ளது. ஒரு கிறிஸ்தவர் தவறு செய்திருந்தால், அதற்கு ஒட்டுமொத்த கிறிஸ்தவர்களையும் தவறுசெய்ததாகக் காட்டுவதும் அல்லது பிழையானவர்கள் என எண்ணுவதும் தவிர்க்கப்பட்டு விட்டுக் கொடுப்புடன் செயற்பட முன்வர வேண்டும்.

எது எவ்வாறாக இருப்பினும் வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற பகுதிகளில் வாழும் தமிழர்கள், குறிப்பாக வடக்கில் வாழ்கின்ற தமிழர்கள் மதம், சாதி என்ற நிலைப்பாட்டில் இருந்து விடுபட்டு ஒற்றுமையாக எமது தேசியத்தை நிலைநாட்டி நமது உரிமையை அரசியல் ரீதியாக வென்றெடுக்க அனைத்து தலைமைகளும் முன்வர வேண்டும். இல்லையேல் நமது அரசியல் ரீதியான இருப்புக்கள் கேள்விக்குறி ஆவதுடன் தமிழர்களுடைய அரசியல் பேரம் பேசும் சக்தியை விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாவதை யாராலும் தவிர்க்க முடியாததாகிவிடும்.■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மறைக்கப்பட்ட ஜனநாயகம்

✍ தியாகநிதி

## புரிதல் 01

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு ஆட்சி உண்டு என்றால் அது 2016ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த நல்லாட்சி தான்...!

அனைத்து தரப்பினரும் விமர்சிக்கும் விசித்திரமான தலைவர்கள் சங்கமிக்கும் காலமும் இதுதான்.

நாம் கடந்து வந்த வரலாற்றுப் பாதையில்தெளிவாகத் தெரியும் ஒரு உண்மை உடைந்ததும் இந்த காலகட்டத்தில் தான்.

சுதந்திரம் கிடைத்து 71 வருடம் கழித்தும் இன்னும் ஆரோக்கியமான உணவும் சுகாதாரமான வாழ்வும் இல்லாது வாடும் குடும்பங்கள் எத்தனை எம் தேசத்திலே !

வேலையற்று விரக்தியில் வீதியில் நிற்கும் இளைஞர்கள் தான் எத்தனை எம் தேசத்திலே!

ஒதுங்கி வாழ நிழல் இல்லாது தெருவோரம் கிடக்கும் குடும்பங்கள் தான் எத்தனை எம் தேசத்திலே!

அடிமை இலங்கையிலும் கை ஏந்தாத மனிதன் இன்று பிச்சை பெற கையேந்தும் அவலங்கள் தான் எத்தனை இவ் தேசத்திலே !

இந்த அவலங்களுக்கு மத்தியில் 2016ல் ஆட்சிக் கட்டில் ஏற்றப்பட்ட இந்த நல்லாட்சியைப் பற்றிய ஒரு பார்வையை முன்வைக்கின்றது இத்தொடர்.

முதலில் இந்த நல்லாட்சியைப் பற்றி ஒரு புரிதலுக்கு வர வேண்டும்.

தற்போது பதவியில் இருக்கும் அரச தலைவரை ஏன் பொது வேட்பாளராகக் கொண்டு வர வேண்டும்?

அவர் முன்னாள் ஜனாதிபதியின் அரசில் சுகாதாரத் துறை அமைச்சராக பணியாற்றியவர். அவரை ஏன் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்க வேண்டும்? அவரையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் இன்று வரைலும் ஆதரிக்க வேண்டும்? என்ற கேள்விகளுக்கு ஒரு புரிதல் முதலில் வர வேண்டும். இலங்கையில் நடந்து முடிந்த யுத்தம் சர்வதேசத்தின் அதிகார தேவைக்காக நடந்த ஒரு வர்த்தக முயற்சி என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த வர்த்தக சதியில் அப்பட்டமாக, தான் மட்டுமல்லாது இந்த நாட்டையும் இழுத்துச்சிக்கவைத்த பெருமை முன்னாள் ஜனாதிபதி அவர்களையே சாரும். இந்த சர்வதேச சதி பின்னலை, காலம் காலாவதியாகிய பின்னரே தெரிந்து கொண்டது போல, பின்னாளில் அந்தர் பல்டி அடித்தார் அவர். சூடுபிடிக்கும் நேரத்தில் ஆட்டத்தைக் கலைத்து விடும் வீரமான வித்தை கற்றவர்கள் இந்த ஆட்சியாளர்கள். உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க நள்ளிரவில் பாராளுமன்றத்தைக் கலைத்த கதை எம்மில் பலருக்குத் தெரிந்ததே.

கடந்த வந்த பாதை கரடுமுரடான காட்டு பாதை 2016க்கு முன்னர் இலங்கையின் வரலாற்றில் எந்தவொரு தலைவர்களையும் விமர்சிக்கும் சுமூகமான சூழ்நிலை இருந்தது இல்லை. இந்த நாட்டிலே வெளிப்படையாக எழுதும் பேசும் உரிமை இருந்தது இல்லை. முதலில் இந்த எழுத்து சுதந்திரத்திற்கு நல்லாட்சிக்கு ஒரு நன்றி. கடந்த காலம் கருப்பு மையினால் கிறுக்கப்பட்ட ஒரு சரித்திர சுவடி. ஏனென்றால், இந் நாட்டின் ஆட்சிக் கட்டில் ஏறிய இரண்டு மாபெரும் கட்சிகள் இருக்கின்றன. அவை ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஆகும். நாட்டை ஆளும் வாக்கு தகமையுடைய பலமான கட்சிகள் இவை. இவை இரண்டுமே குடும்ப கட்சிகள் எனலாம். மகிந்த ராஜபக்ச சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆட்சியில் பிரதமராக வருவதற்கு முன் வீதி அபிவிருத்தி மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சராகவே இருந்தார் .

இந்த சூழ்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் குடும்ப ஆட்சி பண்டாரநாயக்க வம்சத்திடமும், ஐக்கிய தேசியக் கட்சி டி. எஸ் .சேனாநாயக்கா குடும்பத்திடமுமே இருந்து வந்தது. இன்றளவிலும் அரசியலின் பாதி வகிபாகங்கள் ஒரு சில குடும்பங்களின் கைகளிலேயே உள்ளது. இந்த நிலையில் சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் இரண்டாவது ஆட்சிக் காலம் முடிவடைந்து கொண்டு இருந்த காலகட்டத்தில், அந்த குடும்ப ஆட்சியை ஒப்படைக்க பண்டாரநாயக்க வம்சத்தில் தகுதியான ஒருவர் இல்லாத காரணத்தாலும், நாட்டில் குடும்ப ஆட்சி நிலவுவதாக மற்றைய குடும்ப கட்சி பிரசாரம் செய்ததாலும், கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்று இருந்ததாலும், வேறு வழி இன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் குடும்ப ஆட்சி முடிவுக்கு வந்தது. இதற்கு இடையில் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க விடுதலை புலிகளுடன் சர்வதேச மேற்பார்வையில் சமாதான பேச்சுவார்த்தை மேற்கொண்டு தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கும் தருவாயிலில், கடுமையான இனவாத போக்குடைய பௌத்த மத தலைவர்களின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை விமர்சிக்கத் தொடங்கியது. இந்த சூழலில் தான் சந்திரிக்கா அம்மையார் அற்புதமான ஒரு அந்தர் பல்டி அடித்து ரணில் விக்ரமசிங்கவின் ஆட்டத்தைக் கலைத்தார்.

.

பாதுகாப்பு அமைச்சு, ஊடக அமைச்சு, வெளிவிவகார அமைச்சு போன்ற முக்கிய அமைச்சுகளை தன்வசப்படுத்திக்கொண்ட அம்மையார் பாராளுமன்றத்தைக் கலைத்தார் .

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் புதிய பிரதமருக்கான போட்டி ஏற்பட்ட போது சந்திரிக்கா அம்மையார் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் வேறு வழி இல்லாது மகிந்த ராஜபக்சவை பிரதமராக ஆக்கினார். தனது பதவிக் காலம் முடிவடையும் தருவாயில், அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க வேண்டிய நிலையில்,தம் குடும்பத்தைச் சேர்ந்தவர் எவரும் போட்டியிடவும் வெற்றி பெறவும் தகுதி இல்லாது இருந்த நிலையில், பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தார் அம்மையார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்சவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்கவும் களம் இறங்கினர். சரமாரியான, காரசாரமான விமர்சனங்கள் இருதரப்பு தேர்தல் மேடைகளையும் அதிர்வித்தன. இது இவ்வாறு இருக்க வடக்கு கிழக்கு மக்களை விடுதலைப் புலிகள் இயக்கம் வாக்கெடுப்பைப் புறக்கணிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் 2005 ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் நாள் இடம்பெற்றது. பிரதமர் மகிந்த ராஜபக்ச அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி கொண்டு பதவியில் அமர்ந்தார். மொத்த வாக்குகளில் முறையே மகிந்த ராஜபக்ச 4,887,152, ரணில் விக்ரமசிங்க 4,706,366 வாக்குகளைப் பெற்றனர். வெறுமனே 180,786 வாக்குகள் வித்தியாசத்தில் ரணில் விக்ரமசிங்க தோல்வி அடைந்தார்.

**2005 தேர்தல் வாக்கு விபரம்**

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 1,33,27,160 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 98,26,778 |
| நிராகரிக்கப்பட்டவை | 1,09,739 |
| கணிப்புக்கு எடுக்கப்பட்ட வாக்குகள் | 97,17,039 |

எனவே, இங்கே மொத்தமாக 3,610,121 (அளிக்கப்படாத வாக்குகள் 3,500,382 + நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 109,739) வாக்குகள் கணக்கில் சேர்க்கப்படாமலேயே மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்னர், இரண்டாவது முறையாகப் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ச பொது வேட்பாளராகக் களம் இறங்கிய சரத் பொன்சேகாவை இன துரோகி என்றும், காட்டிக்கொடுத்தவன் என்றும் கூறி தேர்தல் மேடை ஏறினார். இது இலங்கையின் வரலாற்றில் ஆறாவது அரசு தலைவரைத் தேர்ந்தெடுக்க இடம் பெற்ற தேர்தலாகம். மகிந்த ராஜபக்சவின் முதலாவது ஆட்சிக் காலம் 2011ல் நிறைவடைவதற்கு முன்னதாகவே புதிய தேர்தலுக்கான அறிவிப்பு 2009 நவம்பர் 23 ம் நாள் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் டிசம்பர் 17, 2009 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தேர்தல்கள் 2010, சனவரி 26 இல் இடம்பெற்றது. பல்வேறு தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றன என்று கடந்த மாதம் இடம்பெற்ற தொலைக்காட்சி விவாதத்தின் போது சரத் பொன்சேகா வெளிப்படையாக தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மகிந்த ராஜபக்ச 6,015,934 வாக்குகளும் சரத் பொன்சேகா 4,173,185 வாக்குகளும் பெற்றனர். சுமார் 1,842,749 வாக்குகள் வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்று இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக பதவியில் அமர்ந்தார்.

**2010 தேர்தல் வாக்கு விபரம்**

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 1,40,88,500 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 1,04,95,451 |
| நிராகரிக்கப்பட்டவை | 1,01,838 |
| கணிப்புக்கு எடுக்கப்பட்ட வாக்குகள் | 1,03,93,613 |

இங்கே அளிக்கப்படாத வாக்குகள் 3,593,049. எனவே, மொத்தமாக 3,694,887 வாக்குகள் கணக்கில் சேர்க்கப்படாமலேயே மீண்டும் ஜனாதிபதி ஆனார் மகிந்த ராஜபக்ச.

இங்கே ஒரு பொதுவான விடயம் உள்ளது. 2005ல் மொத்தமாக 36,10,121 வாக்குகளும், 2010ல் மொத்தமாக 36,94,887 வாக்குகளும் மகிந்த ராஜபக்சவுக்கு மட்டுமல்ல ரணில் விக்ரமசிங்க, சரத் பொன்சேகா என எவருக்கும் இல்லாது போகின்ற ஒரு வாக்கு வங்கியே அது.

இவ்வாறு தான், இதுவரை காலமும் ஆட்சியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருந்தஇரண்டு கட்சிகளுக்கு உள்ளேயிருந்து, இன்னுமொரு குடும்பம் எழுச்சிக் கண்டு , ஆட்சி அமைத்து வளர்ந்தது. அரச இயந்திரத்தின் பெருவாரியான வெற்றிடங்களை தம் குடும்ப அங்கத்தினர்களையும் தம் ஆதரவாளர்களையும் கொண்டு இறுகத் தழுவி நின்ற பத்து வருட கால குடும்ப ஆட்சியை வீழ்த்தித்தான் 2016 இல் உருவாக்கப்பட்ட இந்த நல்லாட்சி அரசு கட்டமைக்கப்பட்டது.

(புரிதல் இரண்டில் தொடர்வோம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தியாவின் பிரபலமான ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஒடுக்கப்படும் சமூகங்களின் உரிமைகளுக்காக மாணவர் போராட்டங்களின் போது வளாகத்தில் காஸ்மீர், நாகலாந்து, மனிப்பூர், அசாம், ஈழம், பாலஸ்தீனம் என போராடும் மக்களுக்கு ஆதரவாக சுலோகம் தாங்கி காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகை.

> ஐநா சபையில் அரசுகள் பெரும் முதலாளிகளின் நலன்களைத் தான் முதன்மையாகப் பிரதிநிதித்துவம் செய்யும்

# விடுதலைப் போராட்டத்தின் உண்மையான சர்வதேச நட்புச் சக்திகள் யார்?

ஈழப்போர் முடிந்து இன்னும் சில நாட்களில் ஒரு தசாப்த காலம் முடியப் போகின்றது. போருக்குப் பின்னர் தமிழர் தரப்பின் அரசியல் நகர்வுகளில் தெளிவான போக்குகள் எதனையும் அவதானிக்கக் கூடியதாக இல்லை. அதேவேளை, மக்களின் உரிமைக்கான அரசியல் சிலரின் பதவி ஆசைகளுக் கான அரசியலாகி வருவதையும் காண முடிகிறது.

இதனால் தான்,கடந்த பத்து வருடங்களாகச் சர்வதேசத்திடம் நீதி கேட்கப் போனவர்கள் வெறும் கையுடன் திரும்பி வந்திருக்கின்றார்கள். மக்கள் மயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் எதுவுமின்றி வெறும் இராசதந்திர பேச்சுகளினால் எதையும் சாதிக்க முடியாது. எம்மை பயன்படுத்த நினைப்பவர்களின் திட்டத்துக்குப் பலிகடாவாகுவதே நடக்கும்.

சர்வதேசம் என்பது யார்? அவர்களின் நோக்கம் என்ன? ஒடுக்கப்படும் மக்களின் நலன்களில் உண்மையான அக்கறை கொள்வார்களா? நீதியை நிலைநாட்ட தமது இராணுவ - பொருளாதார நலன்களை விட்டுக் கொடுப்பார்களா? எனக்கேள்விகளைத் தொடுத்து ஆராய்ந்தால் சரியான பாதையைக் காணலாம்.

### சர்வதேசம் என்பது யார்?

சர்வதேசம் என்பது உலக மக்கள், உலகளாவிய அமைப்புக்கள், உலக மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகள் என ஒட்டுமொத்தமாகும். ஆனால், இன்றைய சூழலில் ஐநா சபையே ஒரே ஒரு உலகளாவிய அமைப்பாகும்.

இங்கு இன்றைய சூழல் என்பதைச் சற்று விரிந்த கண்ணோட்டத்தில் விளங்கிக் கொள்ள வேண்டும். முன்பு ஒரு சூழல் நிலவியது. இந்தியாவைச் சேர்ந்த நடேசய்யரும், அஸீசும் இலங்கைக்கு வந்து ஒடுக்கப்படும் தொழிலாளர்களுக்காகச் சங்கம் அமைத்து போராடலாம். காந்தி தென்னாபிரிக்காவில் ஒடுக்கப்படும் மக்களுக்காகப் போராடலாம். இந்தியர்கள் சியாவுக்கு சென்று ரசிய புரட்சியில் பங்கெடுக்கலாம். கியூப புரட்சியாளர்கள் இலத்தீன் அமெரிக்க விடுதலைக்காகப் போராடச் செல்லலாம்.

ஆனால், இன்று சாதாரண குடிமக்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் அல்லது அகதியாகச் மாத்திரமே செல்லலாம். மறுபக்கம் ஜேம்ஸ் பேகர் போன்ற பெரும் முதலாளிகள், கொக்கோகோலா போன்ற பெரும் கம்பனிகள் தடைகள் ஏதும் இல்லாமல் எந்த நாட்டிற்குள்ளும் நுழைய முடிகிறது. அதாவது, உழைக்கும் தொழிலாளர்கள் தேசிய அரசு எல்லைக்குள் அடைக்கப்பட்டு, சுரண்டும் முதலாளிகள் உலகெல்லாம் சுதந்திரமாக அனுமதிக்கப் பட்டிருக்கின்றார்கள்.

இப்படியான சூழலில் ஓர் சர்வதேச அமைப்போ, சர்வதேசமோ சுதந்திரமாக உலாவும் தரப்பின் நலன்களைத் தான் முதன்மைப்படுத்தும் என்பதைச் சொல்லாமலேயே விளங்கிக் கொள்ள முடியும்.

உதாரணமாக அண்மையில் இந்தியா, பாகிஸ்தான் இடையில் போர் மூளும் சூழல் உருவாகியது. ஆனால், இருநாடுகளிலும் பெரியளவில் முதலீடுகளைச் செய்திருந்தவர்கள் அழுத்தங்களைக் கொடுத்து இணங்கிப் போகச் செய்திருந்தார்கள். போர் நடந்திருந்தால் இவர்களின் முதலீடுகள் இலாபம் பார்க்காமல் போயிருக்கும். சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளே இந்த இணக்க முயற்சியில் முக்கிய பங்கு வகித்தன.

இதே, நாடுகள் தான் ஈராக்கில் அணு ஆயுதம் இருப்பதாகக் கூறி அந்நாட்டை சீரழித்தார்கள். இன்று ஈராக்கின் எண்ணெய் வளத்தைச் சுரண்டி, பெரிய முதலீடுகளைச் செய்திருப்பதும் இந்நாடுகளில் இருக்கும் பெரும் முதலாளிகள் தான்.

### ஐநா சபை

ஐநா சபை இறைமையுள்ள தேசங்களின் அல்லது அரசுகளின் அமைப்பு. அரசுகள் தான் இதில் உறுப்பினர்கள். இங்கு மக்கள் பங்குதாரர்கள் இல்லை.

ஐநா சபை 1945 இல் ஆரம்பிக்கப்பட்டது. முதல் இராணுவ - பொருளாதார பலம் பொருந்திய 5 நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, ரசியா ஆகிய நாடுகள் தனி ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்நாடுகளுக்குச் சபையில் எடுக்கப்படும் எந்த தீர்மானத்தையும் இரத்துச் செய்யும் வீட்டோ எனும் அதிகாரமும் இருக்கின்றது.

இன்றைய முதலாளித்துவ அரசுகள் பொருளாதார துறையில் அரச தலையீட்டைத் தவிர்த்து, தனியார் துறையினரின் பங்களிப்பை அதிகப்படுத்தி வரும் கொள்கையையே பின்பற்றுகின்றன. அரசானது பாதுகாப்புப் படை, நீதிதுறை, வரித்துறை என்பவற்றைத் தனியார் துறையினரின் தேவைகளைக் கையாளும் வேலையைச் செய்யும்.

உதாரணமாக கம்பஹா வெலிவேரிய எனுமிடத்தில் ஒரு தனியார் கம்பனி குடிநீரை மாசுபடுத்தியது. மக்கள் இதற்கெதிராக போராட்டத்தில் இறங்கினார்கள். சிறிலங்கா அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகச் செயல்படாமல், கம்பனிகளுக்கு ஆதரவாக, போராட்டம் நடத்திய மக்கள் மீது பாதுகாப்புப் படைகளை ஏவி 5 பேரைக் கொலை செய்தது.

இதுபோலவே, ஐநா சபையில் அரசுகள் பெரும் முதலாளிகளின் நலன்களைத் தான் முதன்மையாகப் பிரதிநிதித்துவம் செய்யும் என்பது திண்ணம். ஆனால், சர்வதேசிய இயக்கத்தின் வரலாறு எப்போதும் இது போலவே இருந்ததில்லை.

### சர்வதேசிய இயக்கங்கள்

1939 -1940 ம் ஆண்டு வரை நடந்த இரண்டாம் உலகப் போரின் பின்னர் தான் நிலையான எல்லைகளைக் கொண்ட அரசுகள் உருவாகின. அதற்கு முன்னதாக எந்த அரசும் இன்னுமொரு அரசின் நிலப்பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்ற நிலையே இருந்தது.

இப்படியான சூழல் நிலவிய 1849 ஆம் ஆண்டில் கார்ல் மார்க்சும், பிரெட்ரிக் எங்கல்சும் உலக தொழிலாளர்களை ஒன்றிணையக் கோரிய கம்யூனிச கட்சி அறிக்கையை வெளியிட்டார்கள். இதற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் 1864ம் ஆண்டு தொழிலாளர்களை மையப்படுத்திச் செயல்பட்ட இடதுசாரி அமைப்புகளை ஒன்றிணைத்து முதலாம் அகிலம் எனும் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. 80 இலட்சம் பேர் அங்கம் வகித்த முதலாம் அகிலம் 1976 இல் கலைந்தது.

இதனைத் தொடர்ந்து 1989ம் ஆண்டு எங்கெல்சினால் மார்க்சிய கொள்கையை பின்பற்றிய இடதுசாரிகளை இணைத்து இரண்டாம் அகிலம் நிறுவப்பட்டது. எங்கெல்சின் மரணத்தின் பின் 1916ல் இரண்டாம் அகிலமும் கலைந்தது.

இதனைத் தொடர்ந்து ருசிய சோசலிச புரட்சியின் பின் சோவியத் ஒன்றிய அரசு ஸ்தாபிக்கப்பட்டிருந்த பலமான பின்புலத்துடன், சோவியத் ஒன்றியத்தின் தலைவராக இருந்த லெனினின் தலைமையில் மூன்றாம் அகிலம் ஸ்தாபிக்கப்பட்டது. சோசலிச புரட்சி நிலைக்க வேண்டுமென்றால் உலகெங்கிலும் முதலாளித்துவம் வீழ்த்தப்படவேண்டும், இதன் பொருட்டு உலக உழைக்கும் வர்க்கம் ஒன்றிணைந்து பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை வளர்க்க வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றிய சோவியத் ஒன்றியம் ஒடுக்கப்படும் தேசங்களின் விடுதலைக்காகவும், வளர்ச்சிக்காகவும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது. எனினும், லெனினுக்குப் பின் சோவியத் ஒன்றியத்தின் அதிபரான ஸ்டாலினின் காலத்தில் மார்க்சிய கொள்கைகளில் திரிபுகளை உருவாக்கி, தனிநாட்டிற்குள் சோசலிசத்தை நிர்மாணிக்க முடியும் என்ற அடிப்படையில் சர்வதேசிய கொள்கை கைவிடப்பட்டு, மூன்றாம் அகிலமும் கலைக்கப்பட்டது.

எனினும், சர்வதேசியவாதம் உடனே அழிந்து போகவில்லை. 1950களில் கியூபாவின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட போது, சோவியத் ஒன்றியம் உதவியது. அதைத் தொடர்ந்து கியூபா சர்வதேசிய கொள்கையைப் பின்பற்றி ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கு நிபந்தனை இல்லா ஆதரவை வழங்கியது.

அமெரிக்கா அங்கோலா நாட்டின் மீது ஆக்கிரமிப்பு போரை நடத்திய போது கியூபா இராணுவ கவசவாகனங்களையும், ஆயுதங்களையும் வழங்கி உதவியது. இதன் போது எண்ணெய் வளம் இல்லாத கியூபா தாம் வழங்கிய இராணுவ வாகனங்களுக்கான எரிபொருளையும் வழங்கியது குறிப்பிடதக்கது. மேலும், ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை போராட்டங்களுக்கு கியூப புரட்சியாளர்கள் நேரடியாக உதவினார்கள்.

சர்வதேசிய கொள்கையின் முக்கிய தாக்கமாக வியட்நாம் மீது அமெரிக்கப் போர் தொடுத்த போது உலகெங்கும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த எதிர்ப்பின் முன் அமெரிக்கப் படைகள் தோல்வி கண்டது. வியட்நாம் வீரர்களுக்கு ஆதரவு கொடுத்த புரட்சியாளர் சேகுவேரா பல வியட்நாம்கள் உருவாக வேண்டுமென பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்.

எமது ஈழப்போராட்ட இயக்கங்கள் கூட ஈழ விடுதலை போராட்டம் சர்வதேச உழைக்கும் வர்க்கத்தின் போராட்டத்தின் அங்கம் என அறிவித்து சோசலிச கொள்கையை தழுவிப் போராடியதும் இதனால் தான். மேலும், சோவியத் ஒன்றிய காலத்தில் நிபந்தனையற்ற முறையில் காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த நாடுகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இலங்கையில் சோவியத் ஒன்றியத்தின் உதவியினாலேயே எம்பிலிபிட்டிய கடதாசி ஆலை, உருக்கு தொழிற்சாலை போன்ற பல தொழிற்சாலைகள் அமைத்து கொடுக்கப்பட்டது.

எனினும் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னர் சர்வ தேசிய கொள்கை என்பது வலுவிழந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், மூன்றாம் அகிலம் கலைக்கப்பட்டிருந்த சூழலில், ஐநா சபை உருவானது. காலனிய ஆட்சிக் காலம் முடிவுக்கு வந்திருந்த சூழலில் ஏகாதிபத்திய நாடுகள் தமது சுரண்டலைத் தொடர்ந்து நடத்தும் வகையில் பூகோள மயமாக்கல் கொள்கையை நடைமுறைபடுத்தின. இதன் பின்னரே, உழைக்கும் மக்கள் தேசிய அரசு எல்லைக்குள் முடக்கப்பட்டு, சுரண்டும் முதலாளி வர்க்கம் ஏனைய நாடுகளுக்குள் தடையின்றி நுழையும் ஏற்பாடு உருவானது.

ஐநா சபையும், அதன் துணை அமைப்புகளும் இந்த ஏற்பாட்டை நிர்வகிக்கும் வேலையையே செய்து வருகின்றன. இதை எதிர்த்து சுய பொருளாதாரத்தைக் கட்டமைக்கும் நாடுகளைப் பொருளாதாரத் தடை, மனித உரிமைகள், கடன் நிறுத்தம், அரசியல் சூழ்ச்சி எனப் பல உபாயங்களைக் கையாண்டு வழிக்குக் கொண்டு வருகின்றார்கள்.

இன்று உலக ஏகாதிபத்தியம் அமெரிக்கா,சீனா என இரண்டு முகாம்களாக பிரிந்து இழுபறியில் ஈடுபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மோதலின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தில் இலங்கை இருக்கின்றது. எனவே, இலங்கையை தமது முழுகட்டுப்பாட்டில் வைத்திருக்க ஏகாதிபத்திய முகாம்கள் போட்டியிடுகின்றன. இதற்கு இடைஞ்சலாக இருப்பார்கள் என்பதனாலேயே, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத நடவடிக்கைகளை ஏகாதிபத்திய நாடுகள் முடிவுக்குக் கொண்டு வர உதவின. இதன் போது நடந்த இனப்படு கொலையைக் கண்டும் காணாமல் இருந்தவர்கள், கடந்த பத்து வருடங்களாகப் போர்க் குற்றங்களைச், சிறிலங்காவை தம் வழிக்குக் கொண்டு வரும் துரும்பு சீட்டாகப் பயன்படுத்தி வருகின்றன.

எனவே, ஏகாதிபத்தியங்களின் கட்டுப்பாட்டில், அவர்களின் நலன்களுக்காகவே செயல்படும் ஐநா சபை ஒரு போதும் ஒடுக்கப்படும் நலன்களில் கரிசனை கொண்டு நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்பது உறுதியான விடயமாகும். உண்மையில் ஏகாதிபத்தியங்களால் விடுதலையை விரும்பும் எவரினதும் நண்பர்களாக இருக்க முடியாது.

இந்த சூழலில் ஈழவர்கள் இரண்டு வகையான செயல்தந்திரங்களை வகுத்துச் செயல்பட வேண்டும்.

முதலாவது ஈழவர் அரசியலில் ஏகாதிபத்திய எதிர்ப்பு பண்பாட்டை வளர்த்தெடுத்து, ஏகாதிபத்தியத்தின் நலன்களுடன் பேரம் பேசலுக்குச் செல்வதாகும். ஏனெனில், நண்பர்கள் அல்லாதவர்களுடன் பேரம் பேசல் மூலமே எமது நலன்களைச் சாதித்துக் கொள்ள முடியும்.

எனவே, ஈழச் சமூகத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் பண்பாட்டை வளர்த்து, திருகோணமலை உட்பட எந்த பகுதியிலும் அவர்களின் நலன்களைச் சாதிப்பதற்கு எதிராக இருக்கும் மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இதன் மூலம் ஏகாதிபத்திய அரசுகளை நியாயமாகச் செயல்பட நிர்ப்பந்திக்க முடியும்.

அதே சமயம், உலகெங்கும் இயங்கும் இடதுசாரி அமைப்புகளுடன் தொடர்புகளை வளர்த்து எமது உரிமை போராட்டத்தை எடுத்துரைத்து, எமக்கு ஆதரவாக வென்றெடுக்க வேண்டும். குறிப்பாக கலைக்கப்பட்ட மூன்றாம் அகிலத்தையும், சர்வதேசிய வாதத்தையும் மீண்டும் கட்டியெழுப்ப முயலும் அமைப்புகளுடன் எமது உறவுகளை வலுப்படுத்த வேண்டும். இவர்களே எமதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் உண்மையான நட்பு சக்திகளாக இருப்பார்கள்.

இதன் மூலம் ஐநா சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் மீது உள்ளூர் மட்டத்தில் அழுத்தங்களைக் கொடுக்க முடியும். சீனாவுக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் இடையே மோதல் வலுப்பெற்று வரும் சூழலில் சிறிலங்கா அரசு இருதரப்பையும் சமாளித்து சாதுரியமாகக் காய் நகர்த்தி வருகின்றது.

இதை முறியடித்து ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்தி, எமது தேவைகளுக்கும், அவர்களின் நலன்களுக்குமிடையே பேரம் பேசலை உருவாக்கும் அரசியல் நடவடிக்கையே எமது இன்றைய நகர்வாகவும் இருக்க முடியும். மக்கள் ஏதோவொரு ஏகாதிபத்தியத்தின் பண்பாட்டுக்குப் பழக்கப்பட்டு இசைவாக இருக்கும் போது ராஜதந்திர மட்டத்தில் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் எவ்வித பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில், ஏகாதிபத்தியங்கள் அடிவருடிகளை பிரதிநிதிகளை மக்களிலிருந்தே உருவாக்கிக் கொள்வார்கள்.

எனினும், இது கடினமான பாதையாகும். ஆனால், புரட்சியாளர்கள் கடினமான பாதையை நாட என்றும் தயக்கம் கொள்ள மாட்டார்கள். எனவே, புரட்சிகர பாதையை வகுப்பதும், புரட்சிகர அரசியலையும், பண்பாட்டையும் கட்டியெழுப்புவதே இன்றைய சமூக முன்னோடிகள் செய்ய வேண்டியதாகும். ■

# வெளியாருக்கு தாரைவார்க்கப்படும் புல்மோட்டை கனிய மணல் வளம்





**தி**ருகோணமலை புல்மோட்டை கனிய மணல் வளத்தைப் பன்னாட்டு கம்பனிக்கு தாரைவார்த்து கொடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றது சிறிலங்கா அரசு. அதே வேளை பிரதேச அரசியல்வாதிகளின் பின்புலத்துடன் சட்டவிரோதமாக கனிய மணல் அகழ்ந்து விற்பனை செய்வதும் நடந்து வருகின்றது.

ஈழவர்களை பொறுத்தவரையில் திருகோணமலை பிரதேசம் அரசியல் - பொருளாதார - வரலாற்று ரீதியில் கேந்திரமுக்கியத்துவம்வாய்ந்தஇடமாகும். எண்ணெய் களஞ்சிய தொகுதியுடன் இயற்கையாகவே போரியல் அனுகூலத்துடன் அமைந்திருக்கும் திருகோணமலை துறைமுகத்தை ஆளுமை செய்யச் சர்வதேச நாடுகள் குடுமிப்பிடி சண்டையில் இறங்கி இருக்கின்றன.

திருகோணமலை துறைமுகத்தை போல எமக்கு இயற்கையாகக் கிடைத்திருக்கும் பெரும் வளமே முல்லைத்தீவிலிருந்து திருகோணமலையின் நிலாவெளி வரையிலான கடற்கரை பகுதியில் இருக்கும் கனிய மணல் பரப்பாகும். இக் கனிய மணல் வளம் குறிப்பாக புல்மோட்டை பகுதியில் செறிந்து காணப்படுகின்றது.

சுமார் நான்கு கிலோமீற்றர் நீளமான கடற்கரை பிரதேசத்தில் 200 மீற்றர் அகலத்திற்குக் கனிய மணல் செறிந்து காணப்படுகிறது. வங்காள கடலிலிருந்து அலையால் கொண்டு வந்து சேர்க்கப்படும் இக்கனிய மணல் சேகரிக்கப்படாவிட்டால் மொன்சூன் மழைக் காலத்தில் கடலுக்குக் கழுவிச் செல்லப்படும். ஆனால், ஒவ்வொரு வருடமும் கடலலை வங்காள கடலிலிருந்து புதிய கனியமணல் படுக்கையைக் கொண்டு வந்து சேர்த்துவிடும். சுமார் நான்கு மில்லியன் தொன் அளவான கனிய மணல் ஒவ்வொரு வருடமும் கொண்டு வந்து சேர்க்கப்படுகின்றது.

இந்த கனிய மணலில் இல்மனைற் 70%, சேர்கோன் 8%, ரூற்றைல் 8%, மொனசைட் 0.3%, சில்லிமனைட் 1% என உலகின் அரிதான கனிய வளங்கள் காணப்படுகின்றன. இல்மனைற், ரூற்றைல் ஆகிய கனிமங்களிலிருந்து டைட்டேனியம் எனும் உலோகம் பிரித்தெடுக்கப்படும். டைட்டேனியம் உலகிலேயே விலைக் கூடிய உலோகம் ஆகும். இவ் உலோகம் விமானம் தயாரிக்கப் பயன்படுகின்றது. இதன் காரணமாகவே டைட்டேனியம் கறுப்பு தங்கம் என அழைக்கப்படுகின்றது. உலகிலே டைட்டே னியம் பெறக் கூடிய உயர் தரமான கனிய மணல் கிடைப்பது இலங்கையில் தான். மேலும், இக் கனிய மணலில் அடங்கியுள்ள கனிமங்கள் பிளாஸ்ரிக், உலோகம், பீங்கான், கடதாசி, மை, இறப்பர், விமான தயாரிப்பு தொழிற்துறையிலும், மருத்துவ துறையிலும் பயன்படுத்தப்படுகின்றது.

பருவந்தோறும் புதுப்பிக்கப்படும் வற்றாத கனிய மணல் வளம் இருப்பதானது, அராபிய நாடுகளுக்கு எண்ணெய் இருப்பது போன்றதாகும். இதன் மூலமே இலங்கையைச் செல்வந்த நாடாக்க முடியும்.

1992ம் ஆண்டு உருவாக்கப்பட்ட லங்கா கனிய மணல் நிறுவனம் எனும் அரசுக்குச் சொந்தமான கம்பனி மூலம் கனிய மணல் அகழ்ந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதன் மூலம் வருடாந்தம் 1500 - 2000 மில்லியன் ரூபாய் இலங்கைக்கு வருமானம் கிடைக்கின்றது. மீண்டும் மீண்டும் இவ்வளம் இயற்கையாக புதுப்பிக்கப்பட்டாலும் சூழலுக்குத் தீங்கில்லாமல் பாதுகாப்பான முறையிலேயே மணல் அகழ்வு நடந்து வருகின்றது.

எனினும், இலங்கையில் இக் கனிய மணலில் உள்ள கனிமங்கள் பிரித்தெடுக்கப்பட்டு, பெறுமதி சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுவதோ, அல்லது உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுவதோ இல்லை. மேலும், மிக குறைந்த விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றது.

எமக்கிருக்கும் இந்த வளத்தை எகோர்ட் எனும் இந்திய கம்பனிக்கு இலவசமாக வழங்கும் அமைச்சரவை பத்திரமொன்று 2016 ஆம் ஆண்டு அமைச்சர் ரிசாட் பதியுதீனால் சமப்பிக்கப்பட்டது. எனினும், எதிர்ப்புகள் கிளம்பியதால் அமைச்சரவை பத்திரம் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டது. குறித்த கம்பனிக்கு முதலில் இலவசமாக வழங்கி, அவர்கள் விற்பனை செய்து வருமானம் ஈட்டிய பின் விலையைப் பெற்றுக் கொள்ளும் வகையிலேயே பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எனினும், மீண்டும் அதே அமைச்சரினால் அரேபிய நிறுவனம் ஒன்றுக்கு ஒரு கியுப் கனிய மணல் 145 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யும் அமைச்சரவை பத்திரம் ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது. கட்டிட வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் மணலின் விலை இதை விட அதிகம்.

எமது அரிய வளத்தை வெளிநாடுகளுக்குத் தாரைவார்க்கும் முயற்சிகள் ஒரு புறமிருக்க, இன்னுமொரு புறத்தில் பிரதேச அரசியல்வாதிகளின் பின்புல ஆதரவுடன், சட்டவிரோதமான முறையில் கனியமணல் அகழ்ந்து விற்பனை செய்யப்படுவதும் நடந்து வருகின்றது. இவ்வாறு சட்ட விரோதமாக அகழப்படும் மணல் கிழக்கு கடற்பகுதியில் பன்னாட்டு கம்பனிகளுக்கு சட்ட விரோதமாக விற்கப்படுகின்றது.

இந்த சட்டவிரோத அகழ்வைத் தடுக்கும் வகையில் வேலி அமைக்கச் சென்ற கனிய மணல் கூட்டுத்தாபன அதிகாரிகளைப் பிரதேச அரசியல்வாதிகள் மக்களைத் திரட்டி தாக்கியுள்ளார்கள். பெப்ரவரி மாதமும், மார்ச் மாதமும் இவ்வாறு அதிகாரிகள் தாக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், இந்த விடயம் மறைக்கப்பட்டு, காணிகளை அபகரிக்கச் சென்றவர்கள் தாக்கப்பட்டதாகச் செய்தி பரப்பப்பட்டுள்ளது. இது குறித்து பொலிசார் உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. அரசாங்கத்திலிருக்கும் அரசியல்வாதிகளின் அழுத்தமே இதற்குக் காரணம் என தெரியவருகின்றது.

எமது வளங்கள் எங்கள் அபிவிருத்திக்காக வினைத்திறனான விதத்தில் பயன்படுத்தப்படாமல் அரசியல்வாதிகளின் சுயநலன்களுக்காக வீணடிக்கப்படுவதும், தாரைவார்க்கப்படுவதும், சுரண்டப்படுவதும் துரதிஸ்டவசமானதாகும்.

பன்னாட்டு கம்பனிகளுக்கு இந்த வளம் தாரை வார்க்கப்பட்டால், சூழலைப் பற்றிக் கவலைப்படாமல் அளவு கணக்கின்றி அகழ்ந்து நாசம் செய்து விடுவார்கள்.

இருந்தபோதும், வெளிநாட்டு கம்பனிகளுக்கு கனிய மணல் வளத்தை விற்பனை செய்யவும், கனிமங்களைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடும் உரிமை வழங்கவும் ஆசைப்படுவதின் பின்னால் அரசியல்வாதிகளுக்கு மறை முகமான வருமானங்கள் கிடைக்கும் என்பதை எவரும் இலகுவாக ஊகிக்க முடியும்.

எனவே, எமது வளத்தை நாமே ஆளுமை செய்து, எமது அபிவிருத்திக்குத் திட்டமிட்டு பயன்படுத்தும் உரிமையை நிலைநாட்ட வேண்டியதும், அதை நிர்வகிக்கும் நிர்வாக அலகுகளை வலுப்படுத்த வேண்டியதும் அவசியமானதாகும்.

புல்மோட்டை போன்ற எமது பிரதேச வளங்களை பயன்படுத்தும் தொழிற்துறைகளை உருவாக்குவதிலும், அவற்றை மாகாணசபை அல்லது எதிர்காலத்தில் அதைவிட மேம்பட்ட அரசியல் நிர்வாக அலகின் ஊடாக பரிபாலனம் செய்யும் வழிவகைகள் குறித்தும் நாம் திட்டங்களையும், கோரிக்கைகளையும் வகுத்து செயல்பட ஆரம்பிக்க வேண்டும். அதன் மூலமே எமது வளங்கள் மேலும் மேலும் அபகரிக்கப்படுவதைத் தடுக்க முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றையாட்சி – ஒருமித்த நாடு

# சமவுரிமை – சமஷ்டி – சுயநிர்ணயம் இன்னும் பிறவும் ஈழவரின் உடைமைப்பாடும்




“ ஆசாபாசங்களைத் துறக்கும் பௌத்த நோக்கிற்கும், ஆக்கிரமிக்கும் சிங்கள நோக்கிற்கும் இடையிலான கூட்டு ஓர் ‘கள்ளக் கூட்டாகும்’ ”

## பகுதி 04 பேரினவாதத்தின் தத்துவார்த்த பின்புலம்

'தாமும் தமர்களும் வாழ்வதற்கே இந்தத் தரணி என்ற எண்ணம், தீமைக்கெல்லாம் துணையாகும்' என்பது பாவேந்தர் பாரதிதாசனின் யதார்த்த வரிகளாகும். இந்த வரிகளின் வலிநிறைந்த அனுபவம், இலங்கை தீவின் மக்களுக்கு நிறையவே உண்டு.

இலங்கை தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது என விதைக்கப்பட்ட எண்ணமே இத்தீவின் அவலங்களுக்கு எல்லாம் மூலகாரணமாக உள்ளது. இந்த எண்ணம் வரலாற்றுப் பொய்களிலிருந்து கட்டியெழுப்பப்பட்ட மாயை. இந்த மாயை சிறிலங்காவின் சமூக, அரசியல், பொருளாதார துறைகளில் ஒரு சித்தாந்தமாக வியாபித்துள்ளது.

உலகின் அறிவுத்துறையின் வளர்ச்சிகளுக்கு மத்தியில், மாயைகளிலிருந்து கட்டமைக்கப்பட்ட சித்தாந்தம் கேள்விக்குள்ளாகாமல் தப்பிப் பிழைத்திருப்பது எப்படி? நடைமுறையில் இந்த மாயையைச் சிங்கள சமூகத்தை நம்பச் செய்திருக்கும் தத்துவம் எது? சிங்கள சமூகத்தின் முற்போக்கு புத்திசீவிகளைக் கூட வாயடைக்கச் செய்திருக்கும் தத்துவ ஞானம் எது?

இந்த விசாரணையில் ஆழமாக செல்வோமாயின், சிங்கள சமூகத்தின் ஆக்கிரமிப்பு நோக்கும், பௌத்த மதத்தின் அடிப்படை சிந்தனைகளும் இணைக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட சிங்கள பௌத்த தத்துவஞான மரபைக் கண்டுகொள்ள முடியும். ஆசாபாசங்களைத் துறக்கச் சொல்லும் பௌத்தத்தின் நோக்கிற்கும், சிங்களவர் அல்லாதவர்களின் உடைமைப்பாட்டை ஆக்கிரமிக்கும் சிங்கள நோக்கிற்கும் இடையிலான இந்தக் கூட்டு, ஓர் 'கள்ளக் கூட்டாகும்'.

நடைமுறையில் நாம் எவற்றை எல்லாம் மெய்பித்துக் சாதிக்க விரும்புகின்றோமோ, அதன் மீது நமக்கிருக்கும் ஞானமே தத்துவஞானம் ஆகும். ஐரோப்பிய தத்துவஞான மரபில் பகுதறிவுவாதம் வளர ஆரம்பித்தபின் இலங்கை போன்ற நாடுகளில் புராணக் கதைகளையும், கடவுள் கொள்கையையும் தழுவி வளர்ந்திருந்து தத்துவஞான மரபு கேள்விக்குள்ளாக்கியது.

இலங்கை தீவில் மகாவம்சத்தையும், பௌத்த மதத்தையும் இணைத்து பேரினவாதிகளால் வளர்த்தெடுக்கப்பட்ட தத்துவமும், , மேற்கத்திய அல்லது ஐரோப்பியத் தத்துவஞான மரபு மற்றும் பகுதறிவுவாதத்தின் முன் அம்பலப்படும் நிலை உருவாகியது. ஐரோப்பியரின் வருகை, ருசியாவின் சோசலிச புரட்சியினால் பரவிய மார்க்சிய தத்துவத்தின் தாக்கம் என்பன சிங்கள பேரினவாதத்தின் போலித்தனங்களை அம்பலப்படுத்துவதை வேகமாக்கியது.

சிங்கள பேரினவாதிகள் காலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டக் காலங்களிலேயே இதை நன்கு உணர்ந்து கொண்டிருந்தார்கள். எனவே தான் சிங்களவர் அல்லாதவர்களினதும், இடதுசாரிகளினதும் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட காலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில், சிங்கள தேசியவாதம் வளர்த்தெடுக்கப்பட்டது. இங்கு இடதுசாரிகளும், ஈழவர்களும் சிங்கள தேசியவாத எழுச்சி போக்கின் முன் தோல்விக் கண்டார்கள் என்பதே வரலாற்று உண்மை.

எனினும், அரசியல் போராட்ட அரங்கில் சிங்களவர் அல்லாதவர்களினதும், இடதுசாரிகளினதும் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டினால் மாத்திரம் போதாது என்பதையும் சிங்கள பேரினவாதிகள் உணர்ந்தே இருந்தார்கள். சிங்கள பேரினவாத தத்துவம் அத்தனை பலவீனமானதாகவும், மாயைகளால் கட்டமைக்கப்பட்டதாகவும் இருந்ததே அதற்கான காரணமாகும்.

ஓர் உதாரணத்திற்குச் சிங்கள இனத்தின் தோற்றம் குறித்து மகாவம்சம் சொல்லும் கதையை எடுத்துக் கொள்வோம். மகாவம்சம் கீழ்வருமாறு சொல்கிறது...

> *முன்பு வங்க நாட்டு அரசிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த போது சோதிடர்கள், பெண்ணாக வளர்ந்து மிருகராஜனைக் கூடுவாள் என்றார்கள். இதனால் அரசனும் அரசியும் அவமானத்தால் தமது மகளை தம்முடன் வைத்திருக்க முடியாதவர்களாகினர்.*
>
> *தன்னந்தனியே வீட்டை விட்டு வெளியே அந்த பெண், லால நாட்டின் காட்டில் சிங்கம் ஒன்றைச் சந்திக்க நேர்கின்றது. சிங்கத்துடன் அந்த பெண் உடல் உறவு கொண்டு இரட்டை குழந்தைகளை பெற்றெடுக்கின்றாள்.*
>
> *மகனின் கால்களும் பாதங்களும் சிங்கத்தைப் போல் இருந்ததால் சிங்பாகு என பெயர் வைக்கின்றாள். மகளுக்கு சிம்மசீவலி எனப் பெயர் வைத்தாள். சிங்பாகுக்கு பதினாறு வயதான போது தனது தாய்க்கும், தந்தைக்கும் இடையிலான உடலியல் வேறுபாடுகள் குறித்து கேள்வி எழுப்பினான்.*
>
> *தாய் நடந்தவற்றைக் கூற, பின்னர் தனது சகோதரியையும், தாயையும் தோளில் சுமந்து கொண்டு சிங்கத்திடமிருந்து தப்பி தனது தாயின் வங்க நாட்டிற்குச் செல்கின்றான். அங்கு சிங்பாகுவின் தாய், அவளது மாமன் மகனை மணந்து கொள்கின்றாள்.*
>
> *தனது குழந்தைகளைக் காணாத சிங்கம் அவர்களைத்தேடி கிராமங்களுக்குச் சென்றது. சிங்கம் சென்ற கிராமங்களை எல்லாம் பாழடித்தது. இதனால், வங்க அரசனின் அறிவிப்பின் பிரகாரம், சிம்மபாகு தனது தந்தையான சிங்கத்தைக் கொலை செய்து, வங்க நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றான்.*
>
> *ஆனால், வங்க நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தனது தாயின் கணவனிடம் ஒப்படைத்துவிட்டு, தனது சகோதரி சிம்மசீவலியுடன் தான் பிறந்த லாட நாட்டுக்கே திரும்பி, சிம்மபுரம் எனும் புதிய நகரை உருவாக்கினான். சிம்மசீவலியை தனது இராணியாக்கி கொண்டு சிம்மபுரத்தை ஆட்சி செய்து வந்தான் சிங்பாகு.*
>
> *சிம்மசீவலி பதினாறு முறை இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். இவர்களில் மூத்தவன் விஜயன். உரிய வயது வந்ததும் விஜயன் இளவரசனாக முடிசூட்டப்பட்டான்.*
>
> *விஜயன் துர்நடத்தையுடையவனாக இருந்தான். அவனுடைய சகாக்களுடன் சேர்ந்து மக்களுக்குப் பல இன்னல்களைக் கொடுத்து வந்தான். இதனால் மக்கள் விஜயனைக் கொலை செய்து விடுமாறு மன்னனைக் கேட்டனர். ஆனால் மன்னன் விஜயனையும், அவனது சகாக்களையும் பாதித் தலைமயிரைச் சிதைத்து கப்பலில் ஏற்றி கடலில் விட்டான்.*
>
> *தனித்தனி கப்பல்களில் சென்றவர்கள் வெவ்வேறு தீவுகளில் கரையிறங்கினார்கள். விஜயன் சூர்பாரகம் என்ற இடத்தில் இறங்கினான். அங்கும் அவனது சகாக்களின் கொடுஞ்செயல்களினால் அபாயம் ஏற்படவே மீண்டும் கப்பலேறி இலங்கையில் தம்பப்பன்னி (இன்றைய மன்னார் பகுதி) என்றழைக்கப்படும் இடத்திற்கு வந்தான். இது புத்தர் நிர்வாண நிலை அடைவதற்காக அரச மரத்தின் கீழ் அமர்ந்த அதே தினத்தில் நடந்தது.*

மகாவம்சத்தில் கூறப்படும் இந்த கதையை அடிப்படையாகக் கொண்டே சிங்கள இனத்தின் மூதாதையர்கள் இந்தியர்கள் என்ற விடயம் மழுங்கடிக்கப்பட்டிருக்கின்றது. சிங்களவர்கள் சிங்கத்தின் வழித்தோன்றல் என்பதின் மூலம் சிங்கள இனம் புத்தரால் பௌத்த மதத்தை காப்பதற்காகப் படைக்கப்பட்ட தனித்துமான இனம் என்ற எண்ணம் வரலாற்றுக் காலம் தொட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இன்றைய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் சிங்கத்திற்கும், மனித பெண்ணிற்கும் குழந்தை பிறக்கும் கதையை அடியோடு நிராகிக்கின்றது. இது போல் சிங்கள பேரினவாதம் கட்டமைத்துள்ள அனைத்து கற்பனைகளையும், மாயைகளையும் விஞ்ஞானத்தின் வெவ்வேறு துறைகள் அம்பலப்படுத்தி விட்டன.

எனவே, மேற்கத்தியத் தத்துவஞான மரபில் வளர்ச்சியடைந்த இந்த விஞ்ஞானங்களுக்கு எதிரான சொந்த தத்துவஞான மரபைக் கட்டியெழுப்பச் சிங்கள பேரினவாதிகள் முனைந்திருந்தார்கள். இதற்குப் புத்தரின் போதனைகள் அவர்களுக்குத் துணையாகவிருந்தது. மேற்கத்தியத் தத்துவஞான மரபுக்கும், புத்தரின் போதனைக்கும் பிரதான முரண்பாடு உள்ளது. மேற்கத்தியத் தத்துவஞான மரபைப் பொறுத்தவரையில் கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய ஐம்புலன்களே அறிவை பெறும் அவயங்களாகும். ஆனால், பௌத்த மதமானது இவ் ஐம்புலன்களுடன் மனதையும் அறிவை பெறும் அவயமாகச் சொல்கிறது. அதாவது விஞ்ஞான ஆய்வு முறைகளுக்குப் புறம்பாகத் தியானம் மூலமும், ஆன்மீக உணர்வு மூலமும் அறிவை பெறலாம் என்கிறது.

**✍ ரிச்சர்ட் ஆதிதேவ்**

புத்தர் தியான ஞானத்தின் மூலமே, இலங்கையில் பௌத்தம் தழைத்தோங்கும் என்பதை அறிந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. இந்த முரண்பாட்டை முதன்மைப்படுத்தியும், மேற்கத்தியத் தத்துவஞான மரபுக்கு எதிரான மனோநிலையை வளர்த்தும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை நிலைக்கச் செய்யும் தத்துவத்தை வளர்த்து வருகின்றார்கள்.

இதன் பிரகாரம் மேற்கத்திய விஞ்ஞான விதிகளின் கண்டுபிடிப்புகளையும், ஆய்வு முறைகளையும் மறுத்து வருகின்றார்கள். இவ்வாறே மகாவம்சம் மூலம் கட்டமைத்த சிங்கள இனத்தின் வரலாறும், பேரினவாதமும் மக்கள் மத்தியில் விசாரணைக்குப்படுத்தப்படுவதைப் பேரினவாதிகள் தடுத்து வருகின்றார்கள்.

இதைச் சிங்கள பௌத்த பேரினவாத தத்துவத்தின் தற்கால வழிநடத்துனரான கலாநிதி நலின் த சில்வா முன்வைக்கும் சில தர்க்கங்கள் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

> நியுட்டனின் புவியீர்ப்பு விசை விதி முழு சுத்துமாத்தாகும். புவியீர்ப்பு விசையை மனிதனால் உணர முடியாது. ஐம்புலன்களால் உணர முடியாத, அவதானிக்க முடியாத ஒன்றை இருப்பதாகச் சொல்ல முடியாது.
>
> கடவுளுடன் உரையாடுபவர்கள், தொடர்பில் இருப்பவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஞானத்தின் மூலம் வடமத்திய மாகாணத்தில் நீரில் ஆசனிக் கலந்திருப்பதையும், மகிந்த ராசபக்ச தேர்தலில் தோற்கப் போவதையும் அறிந்திருந்தார்கள்.


சிங்கள பௌத்த விஞ்ஞானத்தின் பிரகாரம் தியானம், ஆன்மீக வழிமுறைகள் மூலமும் அறிவை பெற முடியும். இது மேற்கத்திய விஞ்ஞானத்திலிருந்து வேறானதாகும் என்பதே மேலே எடுத்துக்காட்டிய தர்க்கங்கள் மூலம் நலிந்த சில்வா சொல்கின்றார்.

இந்த சிங்கள பௌத்த விஞ்ஞானம் என்பதை கட்டமைப்பது மூலமே, இத்தீவு சிங்களவர்களுக்கு மாத்திரம் சொந்தமானது என்ற வரலாறு கட்டமைக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்படுகின்றது.

2012ம் ஆண்டு மொரட்டுவ பல்கலைக்கழக சிங்கள பண்பாட்டுச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த 'சிங்கள பௌத்த தத்துவத்தின் அடிப்படையிலான விஞ்ஞானத்தைக் கட்டியெழுப்புதல்' எனும் கருத்தரங்கில் உரையாற்றிய நலிந்த சில்வா, சிங்கள பௌத்த தத்துவத்தின் அடிப்படையிலான விஞ்ஞானத்தைக் கட்டியெழுப்ப முடியுமா இல்லையா என்பது பிரச்சினை இல்லை. அதைக் கட்டியெழுப்பாவிட்டால் சிங்களவர்களாகிய நாம் அழிந்து போவோம்' என்றார்.

இங்கு நம் பேரினவாதி சொல்ல வருவது இத்தீவில் சிங்கள மக்களின் தனியுடைமை என்பது வலுவிழந்து போகும்! மகாவம்ச மாயைகள் அறிவியலின் முன் அம்பலப்படும் எனும் உண்மையையே! ஈழவர்களின் உடைமைப்பாட்டை தொடர்ந்தும் மறுக்க முடியாது எனும் பேருண்மையையே! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரணைமடு – யாழ்ப்பாண நீர் வழங்கல் திட்டத்தின்

## ஆரம்ப பின்னணியும் திட்ட ஏற்பாடுகளும்

✍ கலாநிதி சுப்ரமணியம் சிவகுமார்
சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
பொறியியல் பீடம்
யாழ் பல்கலைக்கழகம்
sssiva100@gmail.com



✍ எஸ்.கோணேஸ்வரன்

**கலாநிதி சு.சிவகுமார் அவர்களின் ஆய்வுக்கட்டுரைகளை www.researchgate.net/profile/Saravanamuttu_Sivakumar எனும் இணையத்தொடுப்பில் வழியே இணையத்தில் தரவிறக்கி வாசிக்க முடியும்.**

**2002**ஆம் ஆண்டில் இயங்கிய முறைசாரா அரச நிர்வாகத்திற்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டினைத் தொடர்ந்து பல்வேறு மீள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டங்கள் முன் மொழியப்பட்டன. அத்தகைய பல திட்டங்களுக்கு உடனடியாக உதவி புரியப் பல அமைப்புகள் முன் வந்தன. எனினும் இரணைமடுவைப் புனரமைக்கும் திட்டம் பாரியத் திட்டமாக இருந்ததால் அதற்கு உதவியளிக்க ஆரம்பத்தில் எவரும் முன்வரவில்லை. அத்தகைய திட்ட முயற்சிகளில் ஒன்றாக யாழ்குடாநாட்டின் சில வரையறுக்கப்பட்ட பிரதேசங்களுக்குத் தரமான குடிநீரையும், வீட்டுப்பாவனை நீரையும் வழங்குவதற்கான மாற்று மூலங்களைத் தேடும் முயற்சியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஈடுபட்டது. அப்போதைய முறைசாரா அரச நிர்வாகம் முக்கிய தீர்மானமெடுக்கும் நிறுவனமாகச் செயற்பட்ட நிலையில் அவர்களின் நிர்வாகக் கட்டமைப்புக்களின் வழிகாட்டலுடன் குடாநாட்டிற்கு வெளியே காணப்படக்கூடிய நீர்வளங்களைக் கண்டறிந்து பயன்படுத்தும் தெரிவுகளும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

இத்தகைய நிலையில் நீண்ட ஆய்வுகளின் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியும் வேறு அனைத்துலக நிறுவனமும் இணைந்து யாழ்குடாநாட்டின் நீர்வளத் தேவைக்கான திட்டத்திற்கு நிதியுதவி செய்ய முன் வந்த போது வன்னிப்பெருநிலப்பரப்பில் உள்ள பெரிய குளங்களில் ஒன்றான இரணைமடுக் குளத்திலிருந்து நீரைப் பெற்றுச் சுத்திகரித்து யாழ்குடாநாட்டிற்கு வழங்கும் முன்மொழிவும் பரிசீலனை செய்யப்பட்டது. இத்தகைய முயற்சிகளுக்கு அக்கால கட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தராகக் கடமையாற்றிய பேராசிரியர் அ.துரைராசா அவர்கள் இத்திட்டம் தொடர்பாக ஏற்கனவே முன்வைத்திருந்த அவரது சிந்தனைகள் பெரிதும் வழிகாட்டின.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் அவர்களால் அழைக்கப்பட்ட உள்ளூர் மற்றும் அனைத்துலக நீர் வளத்துறை விற்பன்னர்களும் நேரடியாகவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபுணர்களுடன் இது தொடர்பில் விவாதித்தனர். அவ்விவாதங்கள் பின்வரும் பல அடிப்படை விடையங்களைக் கொண்டிருந்தன.

*ஆறுமுகத்தின் திட்டத்தினை (யாழ்ப்பாணத்திற்கான ஆறு திட்டம்) மீளவும் பரிசீலனைக்கு கொண்டு வருதல்*

*கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி போன்ற தொலைதூர குடியிருப்புகளின் பிரதேசங்களின் நீண்டகாலக் குடிநீர்ப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஏதுவாக நன்னீர் மூலங்களைக் கண்டறிதல். இதன்கீழ் பூநகரி உள்ள கொக்குடையான் மாறாப்புக்குளத்தை புனரமைத்து மழைநீரைச் சேமித்து விவசாய, குடிநீர்த் தேவைக்குப் பயன்படுத்துவதுடன் இச்செயற்பாடு அப்பகுதியின் நிலக் கீழ் நீர் வளத்தையும் மேம்படுத்தும். இவ்வாறே குடமுருட்டி ஆற்றை மறித்து நீர்த் தேக்கத்தினை உருவாக்குவதன் மூலம் தொடர்ச்சியாக நன்னீர் வழங்கக்கூடிய வாய்ப்புகளைக் கண்டறிதல். மேலும் மண்டைக்கல்லாற்றை மறித்து தேவன் குளத்தை உருவாக்கல்.*

*தொண்டமானாறு நீரேரியை நன்னீரேரியாக்குவதற்கு அதன் உவர்நீர்த் தடுப்பணைகளை மீளக் கட்டியமைத்தல்.*

*யாழ்குடாநாட்டின் நிலத்தடி நீர்வளத்தை மீள்நிலைப்படுத்தி விரிவாக்குவதற்கு வேண்டிய நீண்டகால திட்டங்களை முன்னெடுத்தல். அதுவரையான காலத்திற்கு மட்டும் இரணைமடுக்குளத்திலிருந்து நீர் வழங்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்தல்.*

*குடாநாட்டிற்கான குடிநீரினை இரணைமடுக் குளத்திலிருந்து பெறும்போது அதிகபட்ச பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு குளத்தின் உள்ளேயே நீர் உறிஞ்சுவதற்கான அமைப்பை உருவாக்குதலும், குழாய்களுடாகக் கொண்டுசெல்லப்படும் நீரைத் தூரத்தே வைத்துச் சுத்திகரித்து குடாநாட்டின் மக்களுக்கு வழங்குதல்.*

*யாழ்குடாநாட்டு மக்களைத் தொடர்ச்சியாகத் தொலை தூரத்திலிருந்து சுத்திகரித்து வழங்கப்படும் குடிநீர் வழங்கலில் தங்கவைத்தல் அவர்களின் சுயச்சார்பான இருப்பு நிலையினை கேள்விக்கு உட்படுத்தும். எனவே குறிப்பிட்ட கால அட்டவணைக்குள் (சுமார் 20-30 ஆண்டுகள்) குடாநாட்டின் நிலத்தடி நீர்வளங்களை மீள்நிலைப்படுத்துவதன் ஊடாக இப்பிரதேச மக்கள் தங்களுக்கு அண்மித்த நீர் மூலங்களை சார்ந்திருப்பதை உறுதிப்படுத்துதல்.*

*இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்குடாவிற்கு குடிநீரைக் கொண்டு செல்வதனால் அக்குளத்து நீரில் தங்கி விவசாயம் செய்யும் விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்படாதிருப்பதை மேலதிக உபதிட்டங்களூடாக உறுதிப்படுத்துதல்.*

**உபதிட்டம் 1.** *இரணைமடுக்குளத்தின் நீரேந்தும் இயலளவை அதிகரிப்பதற்காக குளத்தின் அணைக்கட்டைத் திருத்தி வலுவூட்டுதல். இதன்படி அணைக்கட்டானது 100 வருடங்கள் உறுதியாக இருப்பதை உறுதிப்படுத்தல்.*

**உபதிட்டம் 2.** *அணைக்கட்டின் உயரத்தை மேலும் 2 அடிகள் உயர்த்துதல். (பூர்த்தி செய்யப்பட்டுள்ளது)*

**உபதிட்டம் 3.** *குளத்திலிருந்து வயல்களுக்கு நீரெடுத்துச் செல்லும் வாய்க்கால்களைச் செம்மைப்படுத்தி நீர்வழங்கல் ஒழுங்கமைப்பை சிறப்பாக அமைப்பதன் மூலம் நீர்வீணாகுதலை தவிர்த்தல்.*

**உபதிட்டம் 4.** *தற்போது விவசாயிகள் தங்களது தேவைக்கு மேலதிகமான நீரை வயல்களுக்கு பாச்சுகின்றனர். இதனால் மேலதிக நீர் வீணாவதோடு வயலுக்கு இடப்படும் உரங்களும் ஏனைய விவசாய உள்ளீடுகளும் நீருடன் கரைந்து வெளியேறுகின்றன. எனவே விவசாயிகளின் விவசாய முறைகளையும் நீர்முகாமைத்துவத்தையும் மேம்படுத்தவதற்கான பயிற்சிகளை வழங்குதலும் அதனால் மீதப்படுத்தப்படுக்கக்கூடிய நீரை மேலதிக விளைநிலங்களுக்கு பாய்ச்சுதலும். அத்தோடு நீரை உச்சளவில் பயன்படுத்தும் விவசாய நடைமுறைகளைப் போதித்தலும் அவ்வாறான வினைத்திறன் கொண்ட விவசாயிகளுக்கு நிதிசாரா ஊக்கமளித்தலும்.*

மேற்குறிப்பிட்ட விடயங்கள் யாவும் உயர் புலமை வாய்ந்த துறைசார் நிபுணர்களால் ஆய்வு செய்யப்பட்டதுடன் இவை பற்றிய விபரங்களும் விவசாயிகள் அமைப்பினூடாக கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு விளக்கப்பட்டு அவர்களின் சம்மதமும் பெறப்பட்டிருந்தது.

இங்கு ஆரம்பத்தில் குறிப்பிட்டது போலவே பெருகி வரும் சனத்தொகையால் நீர்வளம் அருகி வருகின்றது. 21ம் நூற்றாண்டில் இந்நிலை மேலும் உக்கிரமடையும். உலக யுத்தம் ஒன்று மீண்டும் ஆரம்பிக்குமானால் அது நீருக்காகவே ஏற்படும் என்ற கருத்து மிகையன்று. இவ்வகையில் இரணைமடுவில் இருந்து நீர் வழங்குதல் தொடர்பான விடயத்திலும் உள்ளக முரண்பாடுகள் ஏற்பட்டு வருவது தவிர்க்க முடியாததாகி விட்டது. இதனைச் சுமுகமான முறையிலும் எவருக்கும் பாதகமேற்படாது அணுகுதலுமே அவசியமாகின்றது.

இத்திட்டம் வடக்கு மாகாண மக்களின் சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு இருப்பிற்கான அடித்தளத்தை வழங்குகின்றது. இத்திட்டத்தின் முதன்மை நோக்கம் குடாநாட்டின் குடிநீர்ப் பிரச்சனையின் கடுமையை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு குறைப்பதாகும். அதன் பொருட்டு சில சந்தர்ப்பங்களில் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்புகள் இத்திட்டத்தினுள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் ஏற்றுக்கொண்டு, திட்டம் தேவையான மாற்றங்களுடன் செயற்படுத்தப்படுவதற்கான ஒத்துழைப்பினை வழங்குதல் அனைவரதும் பொறுப்பாகும். அத்துடன் விவசாயிகளால் தற்போது கடைப்பிடிக்கப்படும் விவசாய மற்றும் நீர்முகாமைத்துவ முறைமைகளை மீளாய்வு செய்து உற்பத்தித் திறன் வாய்ந்த வினைத்திறனும்-விளைதிறனும் கொண்ட மாற்று விவசாய முறைமைகளைத் தெரிவு செய்வதால் மக்களின் உழைப்பும் இயற்கைவளமும் விரயமாகுதலைத் தவிர்க்கமுடியும்.

இரணைமடு குளத்திலிருந்து குடாநாட்டிற்குக் குடிநீர் வழங்குதல் என்பது மூன்று பத்தாண்டுகளுக்கு மட்டுமான ஒரு இடைக்கால திட்டமே. இதை மனதில் நிறுத்தி அக்கால கட்டத்தினுள் குடாநாட்டின் நிலத்தடி நீர் இருப்பை புதுப்பித்தல், கடல் நீர் புகும் சிறிய நீரேரிகளை தடுப்பணைக் அமைத்துக் குளமாக்குதல், உள்ளூராட்சி மன்றங்களில் உபவிதிகளை உருவாக்கி ஒருங்கிணைந்த செயன்முறை ஊடாக சகல சிறிய குளங்களையும் தூர்வாரி பராமரித்தல், குடாநாட்டின் சனநெரிசலை குறைக்கும் வகையில் பெருநிலப்பரப்பைநோக்கிய குடிபெயர்வைஊக்குவித்தல், விவசாய முறைமையையும், நீர்முகாமைத்துவத்தையும் மேம்படுத்தல், கிளிநொச்சி விவசாயிகளின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்தல் ஆகிய பணிகளை நிறைவு செய்வதும் அவசியமாகும்.

மேலும், இத் திட்டத்தில் வலியுறுத்துவதானது மேலதிகமாகச் சேமிக்கப்படும் நீரின் 10 வீத பகுதியே யாழ்ப்பாண நீர்ப் பற்றாக்குறை இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். கால்வாய்களை சீர் செய்வதன் மூலம் விரையமாகும் கணிசமான நீர் சேமிக்கப்படும். அத்துடன் கிளிநொச்சியை அண்டிய பெருநிலப்பரப்பில் மழைக்காலத்தில் பாய்ந்தோடும் சிற்றாறுகளின் நீர் கடலுடன் கலக்கும் சந்தர்ப்பத்தில் குளங்கள் அமைத்தும் நீரை உச்ச அளவில் பயன்படுத்தவும் திட்டங்கள் தேவை. இதன் கீழ் சிலகட்டுமான வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களை விரைவுபடுத்தும் வகையில் நிதி பெறும் உபாயங்கள் கண்டறிந்து புதிய குளங்களை விரைந்து உருவாக்குவதன் மூலம் இப்பிரச்சனைகள் பலவற்றுக்குத் தீர்வு காணலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெருந் தோட்ட தொழிலாளர்கள் போராடும் வலுவற்றவர்களா?

தேவ்

இதழ் – 03 இல் வெற்றிபாரதி எழுதிய 'மலையக தமிழர்களும் சுயநிர்ணய உரிமையும்' எனும் கட்டுரையில் தொழிலாளர்களால் வலுவான போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என சொல்லப்பட்ட கருத்துக்கான பதில் கட்டுரை

பெருந் தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் அடிப்படை நாட் சம்பளக் கோரிக்கைக்கு மீண்டும் உறங்கு நிலைக்குச் செல்லும் போக்கைத்தான் காண முடிகிறது. ஆயிரம் ரூபாய் நாட் சம்பளம் என்ற கோரிக்கையை முன்வைக்கும் போதே அதைப் போராடித் தான் பெற வேண்டும் என்பது அனைவருக்கும் தெரியும். தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி இலாபம் அடையும் கம்பனிகாரர்கள், எதையும் தங்கத் தட்டில் வைத்துக் கொடுத்து விடப்போவதில்லை. போராட்டங்கள் மூலம் கம்பனி முதலாளிமார்களுக்கு நெருக்கடி கொடுத்து அவர்களின் இலாப வேட்டைக்குத் தடை போடும் போது மாத்திரமே வேறு வழியின்றி இறங்கி வருவார்கள். இதுவே இலங்கையிலும், உலகத்திலும் தொழிலாளர்களின் அனுபவமாக இருக்கின்றது.

தொழிலாளர் வர்க்கம் தமது சொந்த போராட்ட அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு தான், ஒவ்வொரு முறையும் தமது உரிமைகளை வென்றெடுத்திருக்கின்றது. பெருந் தோட்ட தொழிலாளர்கள் இன்று அனுபவிக்கும் சில உரிமைகள் கூட அவ்வாறான தீரமிக்கப் போராட்டங்கள் மூலம் வென்றெடுக்கப் பட்டவை தான்.

ஆனால், தொழிற்சங்கங்களோ, தொழிலாளர்களால் நீண்ட நாட்களாக போராட முடியாது என்கின்றார்கள். தொழிலாளர்களின் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல வேண்டும், தொழிலாளர்கள் உணவில்லாமல் தவிப்பார்கள் எனப் பல காரணங்களை அடுக்கி வேலை நிறுத்த போராட்டங்களைக் கைவிட சொன்னார்கள்.

பெரிய தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரசும், ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தொழிற்சங்கமான தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் 700 ரூபாய் அடிப்படை சம்பளத்துக்கு இணக்கம் தெரிவித்து கம்பனிகாரர்களுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் யாருக்கும் இயலுமென்றால் 1000 ரூபாய் சம்பளம் வாங்கிக் காட்டுங்கள் என்றார்கள். அதன் அர்த்தம் 1000 ரூபாய் பெற்றுத் தரும் எண்ணம் இல்லை என்பதாகும். அந்த எண்ணம் இருந்திருந்தால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் போராடி இருப்பார்கள்.

அதே போல், ஆளும் கட்சியின் பங்காளிகளான தேசிய தொழிலாளர் சங்கமும், மலையக தொழிலாளர் முன்னணியும் (மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கம்) ஆயிரம் ரூபாய் சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டில் தான் இருக்கின்றார்கள். ஏனெனில், அவர்களும் 1000 ரூபாய் கேட்டு தீர்க்கமான போராட்டங்கள் எதனையும் நடத்தவில்லை. மாறாக வரவு – செலவு திட்டம் ஊடாக தொழிலாளர்களுக்கு 50 ரூபாய் கொடுப்பனவு பெற்றுத் தருவதாக சொல்கின்றார்கள். வரவு – செலவு திட்டம் ஊடாக வழங்கப்படும் கொடுப்பனவானது, தொழிலாளர்கள் நாளாந்தம் வாங்கும் அரிசி, பருப்பு, சீனி போன்ற பொருட்களுக்கு மறைமுகமாக விதிக்கப்படும் வரியினால் கிடைக்கும் பணமாகும். இது தொழிலாளர்களின் பையிலிருந்து எடுத்து அவர்களுக்கே கொடுக்கும் ஏமாற்று வேலையாகும்.

முன்னதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திகாம்பரம், 1000 ரூபாய் சம்பளம் சாத்தியமில்லை என்றார். தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் இருந்த போதும் தொழிலாளர் தேசிய சங்கமும், மலையக தொழிலாளர் சங்கமும் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையிலேயே செயல்பட்டார்கள். ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த பெருந்தோட்ட துறைக்குப் பொறுப்பான அமைச்சர் நவின் திசாநாயக்கவும் ஆயிரம் ரூபாய் சாத்தியம் இல்லை என்றார். மேற்கூறிய தொழிற்சங்கங்கள் அனைத்துமே தொழிலாளர்களால் அதிக நாள் போராட்டங்களில் ஈடுபட முடியாது. எனவே, போராட்டங்களைக் கைவிட வேண்டும் என்றார்கள். இவர்கள் வெவ்வேறு விதமாகக் கூறியதை எல்லாம் பெருந்தோட்ட கம்பனி உரிமையாளர்களை பிரதிநிதிதுவப் படுத்தும் முதலாளிமார் சம்மேளனம் நேரடியாகவே கூறியது. ஆயிரம் ரூபாய் சாத்தியமே இல்லை. தேயிலை தொழில் துறை நட்டத்தில் இயங்குகின்றது. ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தொழிற்சாலைகளை இழுத்து மூட வேண்டும். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் தொழிலாளர்களுக்கே பாதிப்பு என்றார்கள். ஆனால், அரசாங்கம் தேயிலை, இறப்பர் மூலம் வருவாய் கிடைப்பதாகக் கணக்குக் காட்டியுள்ளது. எனில், முதலாளிமார் சம்மேளனம் நட்டம் எனச் சொல்லியது, அவர்களின் இலாபத்தில் ஏற்படும் இழப்பையே என்பது இங்குத் தெளிவாகின்றது.

இங்கு உண்மையில் யார் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவ படுத்துகின்றார்கள் என்ற கேள்வி எழாவிட்டால், நீங்கள் இன்னும் ஏமாந்து கொண்டிருக்கின்றீர்கள் என்று தான் அர்த்தம். தொழிலாளர் வர்க்க போராட்ட வரலாற்றிலிருந்து தொழிலாளர்கள் பாடம் கற்றுக் கொண்டார்களோ இல்லையோ! முதலாளி வர்க்கத்தினர் தொழிலாளர்கள் போராடுவதை தடுப்பது எப்படி என கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்கள் அமைப்பாக இணைந்து தொழிற்சங்க பலம் பெறுவதைத் தடுத்தல். தாமே போலிகளை கொண்டு தொழிற்சங்கங்களை அமைத்தல். தொழிற்சங்க தலைவர்களைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்குதல். தாங்களே கட்டுப்படுத்தும் தொழிற்சங்கங்களை உருவாக்கி தொழிலாளர்களை போராடாத வகையில் விழிப்புணர்வு இல்லாமலும், வறுமையிலும் வைத்திருத்தல். இவை தான் கம்பனிகாரர்கள் கற்றுக் கொண்டிருக்கும் தந்திரங்கள்.

தொழிற்சங்கங்கள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் செயல்பாடுகளும் இதையே ஒப்புவிப்பதைத் தினச் செய்திகளை மேலோட்டமாக வாசிப்பவர்கள் கூட விளங்கிக் கொள்ள முடியும்.

தொழிலாளர்கள் கோரிக்கையைக் கைவிடவில்லை. தொழிலாளர்களுக்கு ஆதரவு கொடுத்தவர்களும் கைவிடவில்லை. ஆனால், தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவபடுத்தும் தொழிற்சங்கங்களும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதிகளும் கைவிட்டு விட்டார்கள். அதுவும், அரசாங்கத்தைக் கவிழ்த்து விடும் பலம் இருந்தும் கூட அதை பயன்படுத்த வில்லை.

அரசாங்கத்துடன் இருக்கும், முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அங்கீகரிக்கப்படாத தொழிற்சங்கங்களால், பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் உரிமையைக் கூட பேரம் பேசும் சக்தியை பயன்படுத்தி வாங்கவில்லை. தொழில் அமைச்சரே பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் தொழிற்சங்கங்கள் எவை எனத் தீர்மானிப்பார். அரசாங்கத்துடன் தொங்கு தசை போல் ஒட்டிக் கொண்டிருக்கும் மலையக மக்கள் முன்னணியும், தொழிலாளர் தேசிய சங்கமும் இதைச் செய்யக் கூட எத்தனிக்காதது அப்பட்டமான துரோகச் செயலாகும்.

ஆனால், இவர்கள் தங்களைப் பேச்சுவார்த்தையில் பங்குபற்ற அனுமதித்திருந்தால் ஆயிரம் ரூபாய் வாங்கி கொடுத்திருப்போம் என அறிக்கை விட்டிருந்தார்கள். இந்த அறிக்கையில் ஓர் உண்மை புதைந்திருக்கின்றது. அதாவது, ஆயிரம் ரூபாய் பெறுவது சாத்தியம் என்பதே அந்த உண்மையாகும். எனில், ஆயிரம் ரூபாய் சாத்தியம் என்ற நிலையிருந்தும் தொழிற்சங்கங்கள் போராடாமல் அல்லது கம்பனிகாரர்களுக்கு சாதகமாகச் செயல்பட்டுள்ளன.

அதாவது, தொழிலாளர்களைப் போராட விடாமல் தடுத்துள்ளன. தொழிலாளர்களுக்கு ஆதரவு கொடுத்த எதிர்க்கட்சிகளும், இடதுசாரிகளும், சிவில் சமூகத்தினரும் கூட *தொழிலாளர்களைப் போராட வேண்டாம், தொழிலாளர்களைப் போராட்டத்தில் இறக்கிவிடும் முட்டாள் தனத்தைச் செய்ய மாட்டோம், தொழிலாளர்களுக்காகத் தாமே போராடி ஆயிரம் ரூபாய் வாங்கி தருகின்றோம்* எனக் கூறியது துரதிஸ்டமானதும், கம்பனிகாரர்களுக்கு சாதகமானதும் ஆகும்.

இவர்கள் அனைவரும் கூறியது தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் வருமானத்தை இழப்பார்கள், பழிவாங்கப்படுவார்கள் என்பதைத் தான். எந்த வேலை நிறுத்த போராட்டத்திலும் இது நடக்கும். போராட்டத்தின் வெற்றி என்பதே, போராடிய காலத்திற்கான ஊதியத்தைப் பெறுவதும், பழிவாங்கல்களுக்கு எதிரான பாதுகாப்பை நிபந்தனையாக விதிப்பதும் தான்.

எனவே, பழிவாங்கப்படுவார்கள் என்பதைக் காரணமாகச் சொல்பவர்கள், முதலாளிமார் சார்பாக தொழிலாளர்களை அச்சுறுத்துபவர்கள் தான். தற்காலிக வருமான இழப்பு என்பது உண்மை தான். அந்த வருமானம் போதாது என்பதால் தானே ஆயிரம் ரூபாய் கேட்கின்றார்கள். போதாத வருமானத்தில் பெரிதாக எதை சாதிக்க முடியும்?

அதுவும் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் வரையிலான தொழிலாளர்கள் தான் இருக்கின்றார்கள். போராடித் தான் வெல்ல முடியும் என்ற நிலை வந்தால் நாம் சகலதையும் எதிர்கொள்ள தயாரகத் தான் வேண்டும். தொழிற்சங்கங்கள் நினைத்தால் இது மிக அற்பமான விசயம் தான். இதுவரை வாங்கிய சந்தா பணத்தைக் கொண்டு சம்பாதித்த வட்டி வருமானம் உட்பட இதர வருமானங்களைப் பயன்படுத்தினால் கூட தொழிலாளர்களைத் தேவையான காலத்துக்குப் பராமரிக்க முடியும். ஏன் தேர்தல் பிரச்சாரங்களுக்கு இந்த பணத்தைப் பயன்படுத்துகின்றார்கள் தானே?

குறைந்தபட்சம் இந்த சந்தா பண இருப்பிலிருந்து தொழிலாளர்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தையாவது குறித்த காலத்திற்கு நடைமுறைபடுத்தலாம். போராட்ட காலத்தில் தொழிலாளர்களைக் கூட்டு அடிப்படையில், சிக்கன வாழ்வு வாழப் பழக்கப்படுத்தலாம். பொதுசனத்தின் உதவியைப் பெறலாம்.

ஆனால், தொழிலாளர்கள் மீது உண்மையான நேர்மையான கரிசனை இருந்தால் மட்டுமே இதை செய்ய முடியும். கரிசனை உள்ளவர்கள் மாத்திரமே செய்வார்கள். இங்குத் தொழிலாளர்களும் ஒன்றை விளங்கிக்கொள்ளவேண்டும். தொழிற்சங்கம் என்பது கோவிலும் இல்லை. தொழிற்சங்க தலைவர்கள் அர்ச்சகரும் இல்லை. முதலாளிமார்கள் கடவுளும் இல்லை.

தொழிற்சங்கம் என்பது தொழிலாளர்கள் தான். தொழிலாளர்கள் இல்லையேல் தொழிற்சங்கமும் இல்லை. தொழிற்துறையும் இல்லை. கம்பனிகளும் இல்லை. முதலாளிகளும் இல்லை. தொழிலாளர்களே சகலமும்.

எனவே, தொழிலாளர்கள் தமது தொழிற்சங்கங்களை தமக்காகச் செயல்படும், தம்மை உண்மையாகப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். தமது அமைப்பு பலத்தில் நம்பிக்கை கொண்டு சகல தயார்ப்படுத்தல்களுடன் தமது கோரிக்கைகளை வென்றெடுக்கும் போராட்டங்களில் இறங்கி வெற்றி பெற வேண்டும். முதலாளிமார்களினதும், அவர்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் சாமரம் வீசுபவர்களின் பொய் பரப்புரைகளை தம் முன்னோர் செய்தது போல் தோற்கடிக்க வேண்டும். அது தொழிலாளர்களால் நிச்சயமாக முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவர்ணவாகினியில் அம்பலமாகிய ஊடக முகம்

கடந்த 19 ஆம் திகதி தொழிற்சங்கம் அமைத்த காரணத்தினால், சிங்கள தொலைக்காட்சி ஊடகமான சுவர்ண வாகினியின் 15 ஊழியர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டனர். இதன் காரணமாக சுவர்ணவாகினியில் நெருக்கடியான நிலை உருவானது.

சுவர்ணவாகினி தொலைக்காட்சியில் எந்த செய்திகளை, நிகழ்ச்சிகளை ஒளி பரப்புவது என முடிவு செய்வது அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் தான். ஏனைய, தொலைக்காட்சியிலும் இதே நிலைமை தான். எனினும், அண்மைக் காலமாக சுவர்ணவாகினியின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருக்கும் மகேஸ் பேரேரா ஊழியர்கள் மீது அளவுக்கு மீறிய அடக்குமுறைகளை ஏவி வந்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், கடந்த 18ம் திகதி, மதிய போசன நேரத்தின் போது, சுவர்ணவாகியின் ஊழியர்கள் 250 பேர் கூட்டமொன்றை நடாத்தி தொழிற்சங்கம் ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளனர்.

மறுநாள் 19ம் திகதி, தொழிற்சங்கம் அமைக்க முன்னின்று செயல்பட்ட 15 பேர் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர். நிறுவனத்தின் பணிகளைக் குழப்பும் வகையில் செயல்பட்டார்கள், உரிய நேரத்தில் கடமைக்குத் திரும்பவில்லை என நிர்வாகத்தால் காரணம் சொல்லப்பட்டுள்ளது.

நிர்வாகத்தின் பழிவாங்கலை எதிர்த்து ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக, சுவர்ணவாகினி சேவையின் நேரலை நிகழ்ச்சிகளும் செய்தி ஒளிபரப்பும் ஸ்தம்பிதம் அடைந்தன. 20ம் திகதி இரவு பேச்சுவார்த்தைக்கு வந்த நிர்வாகத்தினருடன் காணப்பட்ட இணக்கப் பாட்டை அடுத்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. இதன்போது நிர்வாகத்தினர் அடக்குமுறையை பிரயோகித்த நிறைவேற்றுப் பணிப்பாளரை பதவியிலிருந்து அகற்றவும், வேலையிலிருந்து நிறுத்தப்பட்டவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 21ம் திகதி மகேஸ் பேரேரா மீண்டும் சுவர்ணவாகினி அலுவலகத்திற்கு வந்த நிலையில் குழப்பகரமான நிலை உருவானது. அன்றிரவு மீண்டும் நிர்வாகத்துக்கும் ஊழியர்களுக்கும் பேச்சுவார்த்தை நடந்தது. இதன் போது நிர்வாகம் மகேஸ் பேரேராவை பதவி நீக்கம் செய்ய மறுத்துள்ளதுடன், ஊழியர்கள் உருவாக்கி தொழில் திணைக்களத்தில் பதவி செய்த சுவர்ணவாகினி அனைத்து ஊழியர் சங்கத்தை ஏற்றுக் கொள்ளவும் மறுத்துள்ளது. மேலும், ஊழியர்களின் போராட்டங்களைக் கட்டுக்குள் கொண்டு வர நிர்வாகம் பொலிஸ் உதவியையும் நாடியுள்ளது.

சுவர்ணவாகினியில் ஏற்பட்ட பதற்ற நிலை தொடர்பாக ஏனைய தொலைக் காட்சி சேவைகள் எந்த செய்தியையும் வெளியிடாது இருட்டடிப்பு செய்தன. பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னர், சுவர்ணவாகினி செய்தி சேவையில் கூட இந்த விடயம் தொடர்பாக எதுவும் சொல்லப்படவில்லை.

ஏனைய தொலைக்காட்சி சேவை நிறுவனங்களிலும் ஊழியர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எந்தவித சுதந்திரம் இன்மையும், நிறைவேற்று பணிப்பாளர்கள் இதே போல் ஏதேச்சதிகாரமாக செயல்படுவதும், நிறுவன உரிமையாளர்களின் அரசியல் தேவைக்கு ஏற்பவே அனைத்தும் இடம்பெறுவதுமே இந்த இருட்டடிப்புக்குக் காரணம்.

இந்த ஊடகங்கள் தான் சில வாரங்களுக்கு முன் பெருந்தோட்ட தொழிலாளர்களின் உரிமை தொடர்பாகவும் செய்திகள் வெளியிட்டு ஆதரவு கொடுத்தார்கள். ஊடக உரிமைகள் தொடர்பாகவும் கதைத்தார்கள். ஆனால், இவை அனைத்தையும் மக்கள் மீது கொண்ட கரிசனையால் அல்ல என்பதும், அவர்களது சொந்த அரசியல் தேவைக்காக என்பதும் சுவர்ணவாகினி ஊழியர்களின் போராட்டத்தில் அம்பலமாகியுள்ளது.

முன்னைய இதழ்களில் தமிழ் பத்திரிக்கைகளினதும், ஏனைய ஊடகங்களினதும் உரிமையாளர்களாக இருக்கும் முதலாளிகள் குறித்தும் அவர்களின் நோக்கம் குறித்தும் வெளிப்படுத்தி இருந்தோம். ஊடக உரிமையாளர்கள் நேரடியாகவோ, மறை முகமாகவோ அரசியல் அதிகார தொடர்புள்ளவர்களாகவும், சுரண்டும் முதலாளி வர்க்கத்தினராகவும் இருந்து வருவது ஒன்றும் இரகசியமானது அல்ல.

இந்த ஊடகங்கள் இயங்குவது மக்கள் ஆதரவு கொடுப்பதால் தான். ஆனால், இவர்களின் செயல்பாடுகள் மக்களுக்கு எதிரானதாகவே இருக்கின்றது.

குறித்த சுவர்ணவாகினி ஊடகமானது ஈ.ஏ.பி நெட்வோர்க் கம்பனிக்கு சொந்தமாக இருந்தது. 2013 இல் இருந்து இக் கம்பனியின் பெயர் ஈ.ஏ.பி புரோட்காஸ்டிங் எனப் பெயர் மாற்றப்பட்டது. சுவர்ணவாகினியுடன் சேர்த்து சிறி எப்எம், ஈ எப்எம், ரன்வன் எப்எம் ஆகிய வனொலி சேவைகளும் ஈ டிவி தொலைக் காட்சியும் இக் கம்பனிக்கு சொந்தமாக உள்ளது. எனினும், 2016 டிசம்பரில் ஈ.ஏ.பி புரோட் காஸ்டிங் கம்பனியின் உரிமை ஈ.ஏ.பி குழுமத்தை சேர்ந்த நிதி நிறுவனமான ஈ.ஏ.பி பினான்ஸ் கம்பனிக்கு மாற்றப்பட்டது.

2017 ஆம் ஆண்டு ஈ.ஏ.பி பினான்ஸ் கம்பனி 17.5 பில்லியன் ரூபாய் நிதியை மோசடி செய்தது. இதனால் இக்கம்பனி மத்திய வங்கியினால் கையகப்படுத்தப்பட்டது. எனினும், பின்னர் இக்கம்பனியும், ஈ.ஏ.பி குழுமம் பென் ஹோல்டிங்ஸ், புளூ சம்மிட் கெப்பிடல் மெனேஜ்மன்ட் ஆகிய சிங்கபூரை தளமாக கொண்ட கம்பனிகளுக்கு விற்கப்பட்டது. ஈ.ஏ.பி பினான்ஸ் கம்பனியின் நிதி மோசடி தொடர்பாக அரசு நியாயமான நடவடிக்கைகள் எதனையும் இதுவரை எடுக்கவில்லை.

தற்சமயம் சுவர்ணவாகினியின் 60 சதவீத உரிமையை பென் ஹோல்டிங்ஸ் கம்பனியும், 40 சதவீத உரிமையை புளூ சம்மிட் கெப்பிடல் மெனேஜ்மன்ட் கம்பனியும் வைத்திருக்கின்றன.

பென் ஹொல்டிங்ஸ் கம்பனி இங்கிலாந்தில் வசிக்கும் தமிழரான அலெஸ்சிஸ் இந்திரஜித் லோவலுக்கு சொந்தமானதாகும். புளூ சம்மிட் கெப்பிடல் மெனேஜ்மென்ட் கம்பனியை, போர்த்துகல் நாட்டை தளமாகக் கொண்ட பெட்டிகோ கொமர்சியோ இன்டர்நெசனல் கம்பனி உரிமை ஆக்கியிருக்கின்றது. இக்கம்பனி புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமான லைக்கா மொபைல் நிறுவனத்தின் உரிமையாளரான அல்லிராஜ் சுபாஸ்கரனுக்கு சொந்தமானதாகும்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடைய முன்னரே, சில பெரும் வணிக நிறுவனங்களும், முதலாளிகளும் அப்போதைய மகிந்த ராசபக்ச அரசாங்கத்தின் அனுசரனணயுடன் பல துறைகளிலும் முதலிட்டார்கள்.

இன்று அரசாங்கத்தினால் இலங்கையின் பொருளாதார சுயாதிபத்தியமும், இயற்கை வளங்களும் பெரும் முதலாளிகளிடம் தாரை வார்க்கப்படுவதற்கு எதிராக எதிர்ப்புகள் வலுப்பெற்று வரும் நிலையில், அவர்கள் மக்களுக்குத் தகவல் சென்றடையும் ஊடகங்களை உரிமையாக்கிக் கட்டுப்படுத்துகிறார்கள் .

மறுபக்கம் அரசாங்கமும் பயங்கரவாத தடுப்பு சட்டம் போன்ற புதிய சட்டங்களை உருவாக்கி தொழிலாளர் போராட்டங்களை முடக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான போக்குக்கு எதிராகவே சுவர்ணவாகினி தொலைக்காட்சியின் ஊழியர்கள் போராட்டத்தைத் துவங்கியுள்ளனர். அரசியல் எதிரிகள் பின்னாலும், நடிக, நடிகையர்களின் தனிப்பட்ட விடயங்களின் பின்னாலும் அலைந்து திரிந்து செய்தி பிரசுரிக்கும் ஊடகங்கள் சுவர்ணவாகினியில் நடந்த பிரச்சினை தொடர்பாகச்செய்திஇருட்டடிப்புசெய்து அனைவரும் ஒரே குட்டையில் இருப்பவர்கள் என்பதை ஒப்புவித்துள்ளார்கள்.

ஆனால், மக்களின் ஆதரவுடன் இயங்கிக் கொண்டே மக்களுக்கு எதிராக தமது உரிமையாளர்களின் சொந்த நலன்களுக்காகச் செயல்படும் இந்த ஊடகங்களை எதிர்த்தும், புறக்கணித்தும் மக்கள் தமக்கான ஊடகத்தைத் தாமே கட்டியெழுப்ப வேண்டியதின் அவசியத்தை சுவர்ணவாகினியில் நடந்த மேற்குறித்த பிரச்சினையும், அண்மைக் கால ஊடகங்களின் போக்கும் மீண்டு மொருமுறை எமக்கு மிக அழுத்தமாக உணர்த்தியுள்ளது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பத்திரிக்கை



# ஜேவிபினரின் இரட்டை படகில் பயணிக்கும் தேசியவாத அரசியல்

தேர்தல்கள் நெருங்கி வரும் வேளையில் ஜேவிபி எனப்படும் ஜனதா விமுக்தி பெரமுன கட்சியினர் தமது சிங்கள பௌத்த நிலைப்பாட்டை வெளிப் படுத்தி வருவதை அரசியல் களங்களில் அவதானிக்க முடிகிறது.

இவ்வருடத்திற்காக வரவு - செலவு திட்டப் பாராளுமன்ற விவாதத்தின் போது பௌத்த சாசன அமைச்சுக்கான விடயங்கள் கதைக்கும் போது இலங்கை தேரவாத பௌத்தத்தின் மத்திய நிலையமாக உருவாக்கப்பட வேண்டும் என ஜேவிபியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நலின்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அதே போல் சிங்களவர்களுக்கு மாத்திரம் பௌத்த மதத்தைப் போதிக்காது ஏனையவர்கள் மத்தியிலும் பௌத்த மதத்தை கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதே நாடாளுமன்ற உறுப்பினர் அண்மையில், இந்தியாவின் சீக்கிம் பிரதேசத்தில் பிறந்து இலங்கையில் பௌத்த துறவியாக வாழ்ந்த மகிந்த தேரரின் நினைவு தினத்தில் தமிழ் பௌத்தர்களை உருவாக்காததே இலங்கையின் இனமுரன்பாடுகளுக்கு காரணம் எனக் கூறினார்.

மேலும், இக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய யாழ் மாவட்ட அமைப்பாளரான ராமலிங்கம் சந்திரசேகரன் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு, வடக்கில் இராணுவம் இருப்பது மக்களின் பாதுகாப்புக்கு அவசியமானது என இராணுவம் நிலை கொண்டிருப்பதை நியாயப்படுத்தி கருத்து வெளியிட்டிருந்தார்.

சிங்கள பௌத்த பேரினவாதிகளும் இதே விதமான சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்டும் கருத்துகளையே சிங்கள மக்களுக்குக் கூறி வருகின்றார்கள்.

தமிழ் மக்களுக்குச் சகோதரத்துவம், சமத்துவம், சம உரிமை எனக் கூறி தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப தமிழ் மக்களை அழைக்கும் ஜேவிபி கட்சியினர் , இன்னுமொரு பக்கத்தில் சிங்கள மக்களுக்கு, தாம் ஏனைய இனங்களை ஒடுக்கும் சிங்கள பௌத்த தேசியவாதத்துக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை உறுதிபடுத்தும் கருத்துக்களை கூறி வருகின்னர்.

ஒடுக்கப்படுவர்களின் போராட்டங்களை ஆதரித்து முன்னேற்றும் இடதுசாரிய அரசியல் கொள்கையைப் பின்பற்றுவதாக கூறும் ஜேவிபி, இவ்வாறு ஒடுக்கும் பேரினவாதத்துக்கு ஆதரவானவர்களாகவே இருக்கின்றார்கள்.

தமிழ் பேசுபவர்களுக்கு ஒருமுகத்தையும், சிங்களம் பேசுபவர்களுக்கு இன்னுமொரு முகத்தையும் காட்டி இரட்டை படகுகளில் ஜேவிபி பயணிப்பது இதுவொன்றும் முதல் தடவை அல்ல.

கடந்த காலங்களிலும் இதே இரட்டை படகுகில் பயணிக்கும் அரசியலையே செய்தார்கள். ஒரு கட்டத்தில் இரண்டு படகுகளிலும் செல்ல முடியாது எனும் நிலை வரும் போது, இவர்கள் தமிழ் பேசுபவர்களுக்கு ஆதரவான படகில் இருந்து காலை எடுத்து தாம் சிங்கள தேசியவாதிகளே என்பதையே நிரூபித்துள்ளார்கள்.

இடதுசாரிகளாக கூறி கொள்ளும் ஜேவிபி, தொடர்ந்தும் அக்கொள்கைக்கு எதிரான ஒடுக்கும் தேசியவாத நிலைப்பாட்டையே எடுத்து வருவது, இடதுசாரிய கொள்கைக்கு எதிரானதாகும்.●



– பிடல் காஸ்ரோ –

*மனித சமூகம் மிக அண்மையில் கண்ட மகத்தான போராளிகளுள் ஒருவரே பிடல் காஸ்ரோ. இவர் கியூபாவை அமெரிக்க காலனி ஆட்சியிலிருந்து மீட்டு சோசலிச கியூபாவை நிர்மானித்தவர். மானிட சமூகத்தின் எதிரியாகவிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கோட்டையிலிருந்து வெறும் தொன்னூறு கிலோமீற்றர் தொலைவிலிருந்து எதிர்த்து நின்ற வீரர். அமெரிக்க அரசின் கொலைக்கார முகவர் அமைப்புகள் பிடலை அறுநூறு தடவைகளுக்கு மேல் கொலை செய்ய முயற்சி செய்தன. கியூபாவின் சோசலிச புரட்சியை சீர்குலைக்க அமெரிக்கா செய்த எண்ணிலடங்கா முயற்சிகளை எல்லாம் வெற்றிக் கொண்டு மானுட வாழ்வுக்கான சிறந்த தேசத்தை உருவாக்கி காட்டினார் பிடல்.*

*இனாலேயே, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய விடுதலைப் போராளிகளின் மரியாதைக்குரிய தோழர் ஆனார் பிடல். இவர் ஆற்றிய உரைகள் பல கருத்துச்செறிவும், தத்துவச் செறிவும் நிறைந்தவை. கியூபா மீது அமெரிக்கா பொருளாதார தடைவிதித்த போது உலகெங்கும் இருந்த சோசலிசவாதிகள் கியூபாவுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார்கள். 1992 இல் கியூப ஆதரவு மாநாடு ஒன்று கியூபாவில் நடந்தது. 109 நாடுகளை சேர்ந்தவர்கள் பங்குபற்றிய இந்த மாநாட்டில் பிடல் 'மீண்டும் எழுவோம்' என உரையாற்றினார். அந்த உரையின் ஒரு சிறு பகுதியை இங்கு பிரசுரிக்கின்றோம்.*

# சர்வதேச உணர்வு கொள்கை சம்பந்தப்பட்டது–புனிதமானது

இந்த மாநாட்டை கியூபாவுக்கு ஆதரவான மாநாடு என்றுமட்டுமே கூறிவிட முடியாது. நாம் எதற்காக எல்லாம் போராட வேண்டும் என்ற விவாதித்தமோ, முடிவெடுத்தமோ அத்தகைய போராட்டங்களுக்கு எல்லாம் உத்வேகம் ஊட்டக்கூடிய மாநாடு என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம்.

சிறந்த மதிப்புள்ள பல்வேறு கருத்துக்கள் இந்த சந்திப்பில் எதிரொலித்துள்ளன. பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களாக இங்கே நாம் கூடி இருக்கின்றோம் ஆயிரம் அல்ல பத்தாயிரம் என்றால் கூட அடங்காத வித்தியாசமான வடிவில் நாம் காணப்படுகிறோம். என்றாலும் உன்னதமான உலகிற்கான சுயநல மற்றவர்களாக, மனித குலத்தின் சிறப்பியல்புகளின் பிரதிநிதிகளாக நாம் காணப்படுகிறோம். இந்த மாநாட்டில் பங்கேற்கும் ஒவ்வொருவரும் மிக உயர்ந்த மனித உணர்வுகளையும். தார்மீக உணர்வுகளையும் கொண்டவர்களாக காணப்படுகின்றீர்கள்.

இந்த மாநாட்டின் மையப் பொருளாக பொருளாதார தடை எடுத்துக் கொள்ளப்பட்டது. இதையொட்டியே பலரும் கருத்துத் தெரிவித்தார்கள். ஆனால் நான் இந்த பொருளாதார தடை குறித்து அதிகமாக எதுவும் பேசப் போவது இல்லை. ஆனால், இந்த தடை குறித்து சில முக்கியமானவற்றை நான் சொல்லித்தான் ஆகவேண்டும்.

இந்த பொருளாதாரத் தடையின் காரணமாக கியூபாவுடன் வர்த்தகத்தை மட்டுமே அமெரிக்கா நிறுத்திக் கொண்டதாக யாரும் கருத வேண்டாம். தொழில்நுட்பம், இயந்திரங்கள், இன்னும் இன்னும்... அதற்கும் மேல், உணவு பொருட்கள் உட்பட உயிர்காக்கும் மருந்தாக இருந்தாலும் கியூபாவுக்கு வரத்தடை. ஏன், தலைவலி போக்கத் தேவையான ஆஸ்பிரின் மருந்து கூட வரத் தடை. மனித உயிர்களை காக்க, புற்று நோயின் கொடூர பிடியிலிருந்து அவர்களை விடுவிக்க தேவைப்படும் புற்று நோய் எதிர்ப்பு மருந்துகள், பிணியின் பிடியிலிருந்து மனித குலத்தை காக்க உதவும் மருந்துகள் என்று எதுவும் கியூபாவுக்குள் வரத் தடை.

இந்த மிகப்பெரிய ஆற்றல் வாய்ந்த ஏகாதிபத்தியம் கியூபாவுக்கு மிக அருகில் மட்டுமல்ல. கியூபாவுக்குள்ளும் இருக்கிறது. ஏகாதிபத்திய கருத்துக்களை கொண்டவர்கள், ஏகாதிபத்திய தத்துவங்களை கொண்டவர்கள், ஏகாதிபத்திய கோட்பாடுகளை கொண்டவர்கள் எங்களுக்கு அருகில் மட்டுமல்ல, உள்ளேயும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்துக்களைக் கொண்ட மிகச் சொற்பமானவர்கள் துரதிர்ஸ்டவசமாக கியூபாவிலும் இருக்கிறார்கள். பல வருடங்களாக ஏகாதிபத்தியவாதிகள் உலகம் முழுவதும் இத்தகைய அவதூறு கருத்துக்களை பரப்பி வருவதின் விளைவு அது. அமெரிக்காவுக்கு கியூபாவோடு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் விருப்பம் கிடையாது. ஆனால், கியூபாவுக்கு கருத்துகளை ஏற்றுமதி செய்வதில் அது அபார ஆர்வம் கொண்டுள்ளது. அதுவும், மோசமான கருத்துகளை ஏற்றுமதி செய்வதில் முனைப்புக் காட்டி வருகிறது.

தற்போது என்ன நிகழ்ந்து வருகிறதென்றால், சோசலிச நாடுகளுக்குள் இத்தகைய மோசமான கருத்தகளை கொண்டு கடை விரிப்பது. தெளிவாக சொல்வதானால் முன்னாள் சோவியத் யூனியனிலும், இதர சோசலிச நாடுகளிலும் எத்தகைய காரியத்தைச் செய்ததோ, அதையே இப்போது கியூபாவுக்குள் செய்து வருகிறது. வளர்ந்த நாடுகளின் முதலீடு மூன்றாம் உலக நாடுகளில் பெருகிக் கொண்டே வருகிறது. இப்படி வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்திற்கு உதாரணமாக ஐரோப்பாவை கொள்ளலாம். அதே நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. உலகளாவிய பொருளாதாரத்தால் அப்படி என்ன நிகழ்ந்து விடப் போகிறது. வேற்றுமை உலகளாவியதாக ஆகப்போகிறது. சமூக அநீதி உலகளாவியதாக ஆகப் போகிறது. வறுமை உலகளாவியதாக ஆகப்போகிறது. இத்தகைய உலகளாவிய பொருளாதாரத்தோடு தான் நாம் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்றும் வாங்கியும் வாழ் வேண்டிய நிலையில் உள்ளோம். எனவே, இதற்கு எதிரான போராட்டமும் உலகளாவியதாகும். எனவே தான் மனித குல நன்மைக்கு தேவையான, அவசியம் என உள்ளவற்றை இணைத்து கொள்ள வேண்டும்.

மிக மோசமான பொருளாதாரத் தடையை சந்தித்துக் கொண்டிருக்கும் போதிலும், ஐந்து லட்சம் கியூபர்கள் சர்வதேச அமைப்புகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கியூப வைத்தியர்கள் பல நாடுகளில் இலவச மருத்துவ உதவி அளித்து வருகிறார்கள். 26 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்களும், பேராசிரியர்களும் வெளிநாடுகளில் கல்வி புகட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

உயர்ந்த நோக்கத்திற்காக , உன்னத விடுதலைக்காக காலனி ஆதிக்கத்தை எதிர்த்து ஆப்ரிக்கர்கள் போராடிய போது, அந்நிய தேசத்தவரின் பகைமைக்கு எதிராக, நிற வேற்றுமைக்கு எதிராக போராடிய போது, கியூபா தனது ஆதரவை தெரிவித்ததை நான் நினைவு கூறுகிறேன். 40 ஆயிரம் கியூப இராணுவ சிப்பாய்கள் , தென் அங்கோலாவில் அங்கோலா இராணுவத்தோடு இணைந்து போராடினார்கள்.

நாம் உலகத்திற்கு நம்முடைய ஆதரவைத் தெரிவித்து விட்டோம். இப்பொழுது நம் நோக்கு அதைப்பற்றி பேசுவதல்ல. நம்முடைய ஆதரவைப் பொறுத்தவரை நாம் அதிகம் செய்ய வேண்டும், குறைவாகப் பேச வேண்டும். ஏனென்றால் நாம் யாரிடமும் நம் நடத்தைக்காக மன்னிப்புக் கோரப் போவதில்லை. நம்மைப் பொருத்தவரை ஆதரவு உணர்வும், சர்வதேசஉணர்வும் கொள்கை சம்பந்தப்பட்டது. அது புனிதமானதும் கூட...■

*மக்கள் பத்திரிக்கையில் வெளிவரும் கட்டுரைகள், செய்திகள் தொடர்பான உங்களது விமர்சனங்கள், ஆய்வுகள், கருத்துக்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். கட்டுரையாளர்களிடம் உங்களது கேள்விகளையும், எதிர் விமர்சனங்களையும் முன்வைக்கலாம். கருத்துக்களையும் கேள்விகளையும் மின்னஞ்சல், தபால் முகவரி மூலமாகவும், எமது முகபுத்தக பக்கம் ஊடாகவும் அல்லது தொலைப்பேசி மூலமாக எமக்கு கிடைக்க செய்ய முடியும்.*

paththirikkai@gmail.com | +94769098390 | www.paththirikkai.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிக்கை இல.09, வேளாங்கன்னி ஒழுங்கை, திரேசா வீதி, பாலையூற்று, திருகோணமலை எனும் முகவரியில் வசிக்கும் பழ றிச்சர்ட் ஆகிய என்னால் இல.09, வேளாங்கன்னி ஒழுங்கை, திரேசா வீதி, பாலையூற்று, திருகோணமலை எனும் முகவரியில் அமைந்துள்ள லங்காராணி பப்ளிகேசன் அச்சகத்தில் அச்சாக்கம் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.